Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

WEDNESDAY, OCTOBER 13, 2021

புதன்கிழமை ஒக்டோபர் 13, 2021 | ஒளி: 07 கதிர்: 125 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

# “இந்திய இழுவைப் படகுகளை இனித் தாக்குவோம்”

முழுச் செய்தி P4



# மாறுகிறது மஹாபொல

**மகேஸ்வரி விஜயனந்தன்**

மஹாபொல உயர் கல்வி மாணவர் புலமைப்பரிசில் நிதியம் எனும் பெயரை, லலித் அத்துலத்முதலி உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியம் என பெயர் மாற்றம் செய்யவுள்ளதாக வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (12) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

மஹாபொல உயர்கல்வி பொறுப்பு நிதியத்தைத் திருத்துவதற்கான யோசனைகள் அமைச்சரவை சந்திப்பில் முன்வைக்கப்பட்டது. அமரர் லலித் அத்துலத்முதலி, இந்த நாட்டில் பொருளாதார சிக்கல்கள் காணப்பட்ட மாணவர்களின் உயர்கல்விக்கு வாய்ப்பளிக்கும்

தொடர்ச்சி P2



நடைபாதையால் கைகலப்பு

# ஐ.ம.ச ஆதரவாளர்கள் மூவருக்கு பாதிப்பு

**ரஞ்சித் ராஜபக்‌ஷ**

நாவலப்பிட்டி ஜயதிலக மைதானத்தில் அமைக்கப்படும் நடைபாதை தொடர்பில் நேற்று (12) கண்காணிப்பதற்காக வருகைத் தந்த எதிர்க்கட்சி மற்றும் ஆளும் கட்சி ஆதரவாளர்களுக்கு இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

குறித்த நடைபாதை 20 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருவதாகவும் இதனைப் பார்வையிடுவதற்காக நாவலப்பிட்டி நகர சபையின் முன்னாள் தவிசாளர், ஐக்கிய மக்கள் சக்தியின் நாவலப்பிட்டி தொகுதி அமைப்பாளர் ஷசங்க சம்பத், நாவலப்பிட்டி நகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் அவரது ஆதரவாளர்கள் உள்ளிட்டவர்கள் நேற்று (12) சென்றுள்ளனர்.

தொடர்ச்சி P2

இணக்கப்பாடின்றி

# பேச்சு நிறைவு; இன்று முடிவு



அதிபர், ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பில், பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவுடன் நேற்று (12) நடைபெற்ற பேச்சுவார்த்தை இணக்கப்பாடின்றி நிறைவடைந்துள்ளது. இந்நிலையில், அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தொடர்பில், இன்று (13) கூடி ஆராய்ந்ததன் பின்னர், இறுதி முடிவு எட்டப்படுமென தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. தொழிற்சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் மூன்று கட்டங்களின் கீழ் தீர்வு காண்பதற்கான யோசனைகள் அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டன.

அதுதொடர்பில் நேற்றைய தினமும் ஆராயப்பட்டது. அந்தப் பேச்சுவார்த்தை எவ்விதமான இணக்கப்பாடும் இன்றி நிறைவடைந்தது.

மூன்று கட்டங்களாக தீர்வு காண்பதற்காக முன்வைக்கப்பட்ட யோசனையின் பிரகாரம், முதல் கட்டமாக 2022 ஜனவரியில் தீர்வு வழங்குவதாகவும் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்களில் கீழ் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு 2023 இல் தீர்வு வழங்குவதாகவும் அரசாங்கம்

தொடர்ச்சி P2

# பெரிய வெங்காய விலையும் கூடியது



ஒரு கிலோகிராம் உள்ளூர் பெரிய வெங்காயத்தின் மொத்த விலை, 150 ரூபாயாக அதிகரித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெங்காயத்துக்கு 40

தொடர்ச்சி P2



# இந்திய இராணுவத் தளபதி ஜனாதிபதி, பிரதமரை சந்திப்பார்

**இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்து ஆராயப்படும்**

இந்திய இராணுவ தளபதி மனோஜ் முகுந்த் நாராவன, ஐந்து நாள்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு, நேற்று (12) இலங்கையை வந்தடைந்தார்.

தொடர்ச்சி P2

# மாமனாரின் கையைத் துண்டாடி ஆற்றில் வீசிய மருமகன் கைது

**கை தொடர்பில் தகவல் இல்லை**

மாமனாரின் கையைத் துண்டாடி, ஆற்றில் வீசிய மருமகனை பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்தச் சம்பவம் கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது. பாதிக்கப்பட்ட மாமனார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கிளிநொச்சி, கண்டாவளையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 57 வயதான மாமனார், கிளிநொச்சி வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் தற்போது

தொடர்ச்சி P2

# வெள்ளைப்பூண்டு மோசடி; நால்வருக்கும் விளக்கமறியல்



சதொச நிறுவனத்தில் இடம்பெற்ற வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில் கைதுசெய்யப்பட்ட அந்த நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் நான்கு பேரையும் நாளை (14) வரை விளக்கமறியலில் வைக்குமாறு வெலிசறை

தொடர்ச்சி P2



# கோப் குழு, உரம் விவகாரம் விவாதத்துக்கு வருகிறது

**பொதுமக்கள் கலரியை திறப்பது குறித்து ஆராய்வு**

அடுத்த வாரத்துக்கான பாராளுமன்ற அமர்வு, இரண்டு நாள்களுக்கு மட்டுமே நடைபெறும். 19ஆம் திகதி நபி பிறந்தநாள்; 20 ஆம் திகதி போயா தினம் என்பதால் 21, 22 ஆம்

தொடர்ச்சி P2

# குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அரசியலுக்கு விடைகொடுப்பேன்



**மகேஸ்வரி விஜயனந்தன்**

வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் அனைத்தும் குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் கையளிக்கப்பட்டு உள்ளதாகத் தெரிவித்த வர்த்தகத்துறை

தொடர்ச்சி P2

# சீன உர நிறுத்தத்தை இந்தியாவுடன் முடிச்சு போட்டுவிடக் கூடாது

**டலஸ் தெரிவிப்பு: இராஜதந்திரத்துக்கு சிக்கல் இல்லை என்கிறார்.**

**மகேஸ்வரி விஜயனந்தன்**

சீன நிறுவனத்திடமிருந்து சேதன பசளையை இறக்குமதி செய்வதை நிறுத்துவதற்கு எடுத்த முடிவு, இரு நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர செயற்பாடுகளுக்கு எவ்விதமான பிரச்சினையும்

தொடர்ச்சி P2

# பதியுதீன்களின் மனுக்கள் 15இல் பரிசீலனை





பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் மற்றும் அவரது சகோதரர் ரியாஸ் பதியுதீன் ஆகியோர் தாக்கல் செய்திருக்கும் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை இந்த மாதம் 15 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்கு உயர்நீதிமன்றம், இன்று (12) தீர்மானித்துள்ளது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தங்களை விடுதலை செய்யுமாறு உத்தரவிடக் கோரி, தங்களது சட்டத்தரணிகள் ஊடாக மேற்குறிப்பிட்ட இருவரும் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனு நீதியரசர்களான விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ, காமினி அமரசேகர ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் ஆராயப்பட்டபோதே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# மாறுகிறது மஹாபொல

நோக்கில், இந்த நிதியம் உருவாக்கப்பட்டது எனத் தெரிவித்த அவர், அவரின் தனிப்பட்ட நிதியை செலவழித்து பொறுப்பான நிதியம் ஒன்றை ஆரம்பித்ததாகவும் பின்னர், அபிவிருத்தி லொத்தரின் பங்களிப்புடன் பல்வேறு வர்த்தக நிறுவனங்கள், நபர்களின் நிதி மூலம் இந்த நிதியத்தை கட்டியெழுப்பினார் என்றார்.

தற்போது, இந்த நிதியம், பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் 15,000க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு நிதியுதவி செய்து வருவதாகத் தெரிவித்தார்.

எனவே இந்த நிதியத்தின் பெயரை மாற்றவும் இந்த நிதியத்தின் தலைவராக ஜனாதிபதியால் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உயர்நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியை நியமிக்கவும் இந்த நிதியத்தின் பணியாளர்கள் உள்ளிட்டவர்களை பொது சொத்துகள் சட்டத்தின் கீழ் கொண்டு வரவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது என்றார். அதற்கமைய, எதிர்வரும் காலங்களில் உயர்கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு, இந்த நிதியம் பாதுகாப்பாக அமைப்பதே இதன் நோக்கமென தெரிவித்த அவர், இந்தச் சட்டமூலம் வெகுவிரைவில் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படும் என்றார்.

# பேச்சு நிறைவு; இன்று முடிவு

தெரிவித்தது என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தமது சம்பளப் பிரச்சினையை தீர்ப்பது தொடர்பில் அரசாங்கம் வழங்கும் தீர்வை ஏற்றுக்கொள்வதா, இல்லையா என்பது தொடர்பில் தொழிற்சங்க பிரதிநிதிகள் கூடி கலந்துரையாடி தீர்மானிக்கவுள்ளதாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தெரிவித்தன. சம்பளக் கொடுப்பனவை மூன்று கட்டங்களாக வழங்குவதற்கு நேற்றைய பேச்சுவார்த்தையில் தீர்மானிக்கப்பட்டதாக தெரிவித்த இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க, எனினும், உத்தேச சம்பளத்தை ஒரே தடவையில் வழங்குமாறு தொழிற்சங்க பிரதிநிதிகள் தொடர்ச்சியாக வலியுறுத்திய போதிலும் இரண்டு கட்டங்களாக வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொழிற்சங்க நடவடிக்கையை நிறைவு செய்வதா, இல்லையா என்பது தொடர்பில் அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்கங்கள் இன்று (13) ஒன்றிணைந்து கலந்துரையாடி தீர்மானிக்கவுள்ளதாகவும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

# ஐ.ம.ச ஆதரவாளர்கள் மூவருக்குப் பாதிப்பு

எனினும், மைதானத்துக்குள் உள்நுழையும் பிரதான வாயில் நகர சபையினரால் பூட்டப்பட்டிருந்ததால், அவர்கள் மைதானத்துக்கு அருகில் காத்திருந்தனர்.

இதன்போது நாவலப்பிட்டி நகர சபையின் தற்போதைய தவிசாளர் அமல் பிரியங்கர உள்ளிட்டவர்கள் சம்பவ இடத்துக்கு வருகை தந்த போது, இருதரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு, இறுதியில் கைகலப்பில் முடிந்துள்ளது.

இவர்களின் அடிதடியைக் கட்டுப்படுத்த நாவலப்பிட்டி பொலிஸார் வருகை தந்த பின்னரும் கூட, இருதரப்பினரின் அடி தடி தொடர்ந்துள்ளது.

> **நாவலப்பிட்டி நகர சபையின் தவிசாளர் அமல் பிரியங்கர உள்ளிட்டவர்கள் சம்பவ இடத்துக்கு வருகை தந்த போது, இருதரப்பினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டு, கைகலப்பில் முடிந்துள்ளது. பொலிஸார் வருகை தந்த பின்னரும் கூட, இருதரப்பினரின் அடி தடி தொடர்ந்துள்ளது**

இந்தச் சம்பவம் தொடர்பில் இருதரப்பினரும் பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்துள்ள நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் மூவர் காயமடைந்து நாவலப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# பெரிய வெங்காய விலையும் கூடியது

ரூபாய் வரி விதிப்பதற்கு அரசாங்கம் அண்மையில் முடிவு செய்ததை தொடர்ந்து, உள்ளூர் பெரிய வெங்காயத்தின் விலை, 150 ரூபாயாக நேற்று (12) முதல் அதிகரித்துள்ளது.

அடுத்த சில வாரங்களில், ஒரு கிலோகிராம் உள்ளூர் பெரிய வெங்காயத்தின் விலை, 200 ரூபாயை தாண்டும் என்று, தம்புள்ளை பொருளாதார மத்திய நிலைய வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# வெள்ளைப்பூண்டு மோசடி; நால்வருக்கும் விளக்கமறியல்

நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

லங்கா சதொச நிறுவனத்தால் சலுகை விலையில் பொதுமக்களுக்கு விற்கப்படவிருந்த ரூபாய் 74 லட்சம் மதிப்புள்ள 54,860 கிலோகிராம் வெள்ளைப்பூண்டு தொகையை மோசடியாக விற்பனை செய்ததற்கு உதவியதாகவே குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சதொச நிறுவனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் உட்பட நால்வர், வாக்குமூலம் பெறுவதற்காக சி.ஐ.டிக்கு நேற்று முன்தினம் அழைக்கப்பட்டிருந்த

> **சலுகை விலையில் பொதுமக்களுக்கு விற்கப்படவிருந்த ரூபாய் 74 லட்சம் மதிப்புள்ள 54,860 கிலோகிராம் வெள்ளைப்பூண்டு தொகையை மோசடியாக விற்பனை செய்ததற்கு உதவியதாக கைது செய்யப்பட்டனர்**

நிலையில் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் நால்வரையும், வெலிசறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஹேஷாந்த டி மெல் முன்னிலையில் நேற்று (12) ஆஜர்படுத்தியபோதே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

# குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அரசியலுக்கு விடைகொடுப்பேன்

அமைச்சர் பந்துல குணவர்தன, தான் அல்லது தனது குடும்ப உறுப்பினர்கள் எவராவது இந்த மோசடியில் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்பட்டால், அதற்கு மறுநாளே அரசியலுக்கு விடைகொடுத்துவிடுவேன் என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (12) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இந்த மோசடி தொடர்பில் அதிகாரிகள் நால்வர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். இது தொடர்பில் எவருக்கேனும் ஏதாவது தகவல் கிடைத்தால் அதனை, குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.

சிலர், ஊடகங்களிடம் முன்வைத்துள்ள குற்றச்சாட்டு தொடர்பில் ஆராய்ந்து முழுமையான விசாரணை நடத்துமாறு,

> **வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில் குற்றச்சாட்டை முன்வைக்கும் அதிகாரிக்கு தற்போது பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், அவரது பாதுகாப்பு தொடர்பில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக வெளிவரும் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், வெள்ளைப்பூண்டு மோசடி தொடர்பில் குற்றச்சாட்டை முன்வைக்கும் அதிகாரிக்கு தற்போது பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், அவரது பாதுகாப்பு தொடர்பில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக வெளிவரும் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை என்றார்.

இந்த விவகாரத்தின் உண்மை, பொய் தொடர்பில் ஆராய பொலிஸ் திணைக்களம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக, விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் சரத் வீரசேகர தன்னிடம் தெரிவித்ததாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# இந்திய இராணுவத் தளபதி ஜனாதிபதி, பிரதமரை சந்திப்பார்

இராணுவ தளபதி ஷவேந்திர சில்வாவின் அழைப்பை ஏற்று, அவர் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் யுஎல் 122 விமானத்தில், நேற்றுக்காலை 11.05 க்கு, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார். இவருடன் நான்கு சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் வந்துள்ளனர்.

அவர் இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரையும் சந்திக்கவுள்ளார். அத்துடன், பாதுகாப்பு செயலாளர், வெளிவிவகார செயலாளர், படைகளின் தளபதிகள் ஆகியோருடன் சந்திப்புகளை நடத்தவுள்ளார்.

அதுமட்டுமல்லாமல், பிராந்தியத்தில் மிகவும் பாரிய இருதரப்பு கூட்டு இராணுவப் பயிற்சிகளில் ஒன்றான 'மித்ர சக்தி' பயிற்சியையும் அவர் பார்வையிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் கஜபா தின கொண்டாட்டங்களிலும் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பதவிதாரிகள் கல்லூரியில் உரை நிகழ்த்தவுள்ள அவர் அங்குள்ள மாணவர்களுடன் உரையாடல்களிலும் ஈடுபடவுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையிலுமான பகிரப்பட்ட ஆழமான ஒத்துழைப்பு

> **இரு நாடுகளுக்கிடையிலுமான பகிரப்பட்ட ஆழமான ஒத்துழைப்பு மற்றும் வலுவான உறவுகள் ஆகியவற்றை இந்த விஜயம் பிரதிபலிக்கின்றது. இந்தியாவின் முன்னுரிமைக்குரிய பங்காளராக இலங்கை காணப்படும் சூழலில், பரஸ்பர நலன்கள் மற்றும் ஏற்கெனவே காணப்படும் இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான மார்க்கங்கள் தொடர்பாக இந்த விஜயத்தின்போது ஆராயப்படும். பிராந்தியத்தில் பாரிய இருதரப்பு கூட்டு இராணுவப் பயிற்சிகளில் ஒன்றான 'மித்ர சக்தி' பயிற்சியையும் அவர் பார்வையிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது**

மற்றும் வலுவான உறவுகள் ஆகியவற்றை இந்த விஜயம் பிரதிபலிக்கின்றது.

இந்தியாவின் முன்னுரிமைக்குரிய பங்காளராக இலங்கை காணப்படும் சூழலில், பரஸ்பர நலன்கள் மற்றும் ஏற்கெனவே காணப்படும் இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான மார்க்கங்கள் தொடர்பாக இந்த விஜயத்தின்போது ஆராயப்படும்.

இந்தக் கலந்துரையாடல்கள் அனைத்தும் கொவிட்-19 வழிமுறைகளை மிகவும் இறுக்கமாகப் பின்பற்றியவாறு நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

# சீன உர நிறுத்தத்தை இந்தியாவுடன் முடிச்சுப் போட்டுவிடக் கூடாது

ஏற்படுத்தாது எனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான டலஸ் அழகப்பெரும, இந்தத் தடையை எதிர்த்து எந்த நிறுவனமும் மேன்முறையீடு செய்யலாம்; அதுவே ஜனநாயகம் என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (12) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இந்த விடயமானது இலங்கையர்களின்

> **இலங்கையர்களின் சுகாதாரம், பாதுகாப்புடன் தொடர்பானது. எனவே, இதனை இராஜதந்திர பிரச்சினையாகப் பார்க்கக் கூடாது. இந்த உரப் பிரச்சினையை சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பிரச்சினையாக மாற்றவும் முயற்சிக்க கூடாது. இந்த வாரத்திலிருந்து உரம் விநியோகத்துக்கு தேவையான அனைத்துப் பொறிமுறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்**

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பானது. எனவே, இதனை இராஜதந்திர பிரச்சினையாகப் பார்க்கக் கூடாது எனத் தெரிவித்த அவர், இந்த உரப் பிரச்சினையை சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பிரச்சினையாக மாற்றவும் முயற்சிக்க கூடாது என்றார்.

இதேவேளை சேதன பசளை விநியோக பொறிமுறைத் தொடர்பில் நாளை அல்லது நாளை மறுதினம் விவசாயத்துறை அமைச்சரால் அறிவிக்கப்படும் என்றார்.

நேற்று முன்தினம் (12) நடைபெற்ற அமைச்சரவை சந்திப்பில் இந்த வாரத்திலிருந்து உரம் விநியோகத்துக்கு தேவையான அனைத்து பொறிமுறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டு வந்ததாகவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

# மாமனாரின் கையைத் துண்டாடி ஆற்றில் வீசிய மருமகன் கைது

சிகிச்சை பெற்று வருகின்றார்.

காணி பிணக்கு காரணமாக நேற்று முன்தினம் (11) மாலை இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று நேற்று (12) விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதுவரை காலமும் விவசாயம் செய்து வந்த மாமனாரின் காணி தொடர்பில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதில், இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தாக்குதலுக்குள்ளான மாமனாரின் இடது கை துண்டிக்கப்பட்டுள்ளதுடன், அதனை மருமகன் கண்டாவளை ஆற்றில் வீசியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனிடையே, இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய 37 வயதான மருமகனை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாகவும் ஆற்றில் வீசப்பட்ட கை தொடர்பில் எவ்விதமான தகவல்களும் வெளியாகவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கோப் குழு, உரம் விவகாரங்கள் விவாதத்துக்கு வருகிறது

திகதிகளில் மட்டுமே சபையமர்வு நடைபெறும்.

ஒக்டோபர் 21ஆம் திகதி குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம், குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் கீழ் ஒழுங்குவிதிகள், இளந்தவறாளர்கள் (பயிற்சிப் பாடசாலைகள்) (திருத்தச்) சட்டமூலம், தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் என்பன விவாதிக்கப்படும்.

அன்றையதினம் உர பயன்பாடு தொடர்பில் தற்போதைய பிரச்சினைகள் குறித்து சபை ஒத்திவைப்பு விவாதம் நடைபெறவுள்ளது. அதனை எதிர்க்கட்சியினர் கொண்டுவரவிருக்கின்றனர்.

ஒக்டோபர் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழான மூன்று கட்டளைகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. அதன்பின்னர், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின்

> **பாராளுமன்ற பொதுமக்கள் கலரியைத் திறப்பதற்கான வாய்ப்புகள் குறித்தும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டதுடன், தற்பொழுது நிலவும் கொவிட்-19 சூழல் மேலும் குறைவடைந்ததும் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய பொதுமக்கள் கலரியை திறப்பது குறித்து ஆராயமுடியும் என்றும் தீர்மானிக்கப்பட்டது**

(கோப் குழு) அறிக்கைகள் குறித்த சபை ஒத்திவைப்பு விவாதம் நடைபெறும். அதனை ஆளும் தரப்பினர் கொண்டுவரவுள்ளனர்.

பாராளுமன்ற பொதுமக்கள் கலரியைத் திறப்பதற்கான வாய்ப்புகள் குறித்தும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்பட்டதுடன், தற்பொழுது நிலவும் கொவிட்-19 சூழல் மேலும் குறைவடைந்ததும் சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய பொதுமக்கள் கலரியை திறப்பது குறித்து ஆராயமுடியும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

# நியூசிலாந்து பயணித்த 63 பேர் திருமலையில் கைது

கடல் மார்க்கமாக நியூசிலாந்துக்கு செல்ல முயன்ற 63 பேரை திருகோணமலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருகோணமலை பகுதியில் உள்ள தங்கும் விடுதியில் இருந்து கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள், யாழ்ப்பாணம் மற்றும் நாட்டின் பிற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அரச புலனாய்வு பிரிவின் திருகோணமலை அலுவலகம் சம்பவ இடத்தில் சோதனை நடத்தி சந்தேக நபர்களை கைது செய்தது.

கைது செய்யப்பட்ட அனைவரையும் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என திருகோணமலை பொலிஸார் தெரிவித்தனர்.

சமையல் எரிவாயு விலை பற்றி

# “நான் ஒன்றும் கூறவில்லை”



சமையல் எரிவாயுவின் விலை அதிகரிக்க இடமளிக்கப்போவதில்லை எனத் தான் கூறவில்லை என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகம் ஒன்றின் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் பந்துல, அரசாங்கத்தால் கட்டுப்படுத்தக்கூடிய, கட்டுப்படுத்த முடியாதவை என இரு அம்சங்கள் காணப்படுகின்றன. அரசாங்கத்தால் வரியை மாத்திரமே விதிக்க முடியும். வரி அறிவிடுவதை அரசாங்கம் நிறுத்தினால் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளத்தை வழங்க முடியாத நிலை ஏற்படும் எனவும் அமைச்சர் பந்துல தெரிவித்தார்.

பொருள்களின் விலையை ஒருபோதும் குறைக்க முடியாது. அதுவே உண்மை. அதேபோல கடந்த கால நிலைமைகளை கருத்திற்கொண்டு எரிபொருளின் விலையும் அதிகரிக்கப்பட்டிருந்தது. தற்போதும் எரிபொருளின் விலையை அதிகரிக்க வேண்டிய நிலையே காணப்படுவதாக அமைச்சரவைக் கூட்டத்தில் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில கூறியதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன இதன்போது தெரிவித்தார்.

பொருள்களின் விலை அதிகரிப்பை

# கட்டுப்படுத்த முடியவில்லை



■ ஆளுங்கட்சி எம்.பி விசனம்

பொருள்களின் விலை அதிகரிப்பை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனை நான் ஒருபோதும் நியாயப்படுத்தப் போவதில்லை என ஆளுங்கட்சி எம்.பி திஸ்ஸ குட்டியாரச்சி தெரிவித்தார்.

ஆளுங்கட்சி என்ற வகையில் அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்பை நான் ஒருபோதும் நியாயப்படுத்தப்போவதில்லை. பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. நாட்டு மக்கள் மூன்று வேளை உணவு உண்ணுவதற்கு சிரமப்படுகிறார்கள்.

நாட்டு மக்கள் அனைவரும் விரும்பும் தீர்மானங்களை எடுக்கும் அரசாங்கம் நாம் அல்ல. பொருள்களின் விலை அதிகரிப்பை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாது போயுள்ளது. அதனாலேயே எம்மால் பொருள்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த முடியவில்லை எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்தால் பொருள்களின் விலைகளை கட்டுப்படுத்த முடியவில்லை என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். பொருள்களின் விலையை கட்டுப்படுத்தினால் பிரச்சினைகள் ஏற்படும். அரச செலவீனங்களை குறைக்கும் செயற்பாடுகளையே நாம் செய்து வருகிறோம் எனவும் தெரிவித்தார்.

ஹபரண – குருநாகல் ரயில் பாதை

# நிர்மாணப் பணிகள் விரைவில்



ஹபரண தொடக்கம் குருநாகல் வரையிலான ரயில் வீதியை நிர்மாணிக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ரயில் பாதை அமைக்கப்பட்ட பின்னர், தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துடனான தொடர்பு அதிகரிக்கும் வாய்ப்புகள் கிடைக்குமெனவும் தெரிவித்தார்.

இப் பிரதேசங்களில் வசிப்பவர்கள் தமது மரக்கறி உற்பத்தி பொருட்களை இலகுவாக தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்துக்குக் கொண்டு சென்று விற்பனை செய்யும் வாய்ப்பும் இதன் மூலம் கிடைக்கவுள்ளன என்றும் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம குறிப்பிட்டுள்ளார்

பொருள்களின் விலை அதிகரிப்புக்கு

# இறக்குமதி பொருள்களின் விலை உயர்வே காரணம்



உலக சந்தையில் இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதாலேயே உள்நாட்டிலும் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன, உலகம் முழுவதிலும் கொரோனா வைரஸ் பரவலால் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இதனால் பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன. இதனால் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன இதன்போது தெரிவித்தார்.

இதனாலேயே நாட்டில் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன, இக்கட்டான இந்த நிலைமையில் வர்த்தகர்கள் தேவையற்ற விதத்தில் இலாபமீட்ட வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

# கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் மரணம்

கலேவெல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கலவெவ பகுதியில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமான ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

நபர் ஒருவர் மற்றைய நபரை கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் இந்த கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 22 வயதுடைய இளைஞன் ஒருவனே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் கலேவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

> கலவெவ பகுதியில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சினையின் காரணமான ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்

# அதிபர், ஆசிரியர்களால் மாணவர்களின் கல்வி பாதிப்பு



அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடுகளால் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களால் அனைத்து மாணவர்களினதும் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. இதில் அனைவரும் கவனம் செலுத்த வேண்டுமென முருத்துட்டுவே ஆனந்த தேரர், தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆசிரியர்களின் ஆசீர்வாதம் மாணவர்களுக்கு அவசியமான ஒன்று. இதனைக் கருத்திற்கொண்டு அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாட்டுக்கு அரசாங்கம் தீர்வை வழங்கி அப்போராட்டத்தை துடைத்தெறிய வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

அதிபர், ஆசிரியர் போராட்டங்களுக்கு வழங்க வேண்டியதை வழங்கி தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியும். எனினும் முறையற்ற நிர்வகிப்பாலும் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளாலும் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் முருத்துட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

# ஜி.எஸ்.பி சலுகை நிறுத்தப்படுமென சிலர் மகிழ்ச்சி அடைகின்றனர்

**அப்படி ஒரு போதும் நடக்காது**



இலங்கைக்கு ஜி.எஸ்.பி சலுகை நிறுத்தப்படுமென நினைத்து, மகிழ்ச்சி அடைய ஒரு கூட்டம் காத்திருக்கிறது. அப்படி ஒரு போதும் நடக்காது. இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

கண்டி, ஹந்தரலியத்தை என்னுமிடத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் ஊடகங்களுக்கு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

எமது நாட்டு நிறுவகங்களின் பொறுப்பையும் கடமைகளையும் நாம் வெளிநாட்டு நிறுவனங்களது கைகளில் ஒரு போதும் ஒப்படைக்க மாட்டோம்.

சகல நாடுகளுடனும் நட்பு, வினைத்திறனுடன் தொழிற்படுவதே எமது வெளி நாட்டுக் கொள்கையாகும். எனவே முதலீடு மற்றும் சுற்றுலா துறைகளில் அவர்களுடன் இணைந்து செயற்பட ஆயத்தமாக உள்ளோம்.

நல்லிணக்கம் தொடர்பான கொள்கைகளை நாமே வகுத்துக் கொள்ள வேண்டும். 30 வருடம் யுத்தம் நடந்து, அது முடிவடைந்த பின்னர் நிச்சயமாக பிரச்சினைகள் உருவாகத்தான் செய்யும் என்பதை நாம் எதிர்பார்க்கத் தான் வேண்டும். அது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுப்பதென்பதை பாராளுமன்றமும் எமது அமைப்புகளுமே முடிவு செய்ய வேண்டும். யாரும் நல்ல கருத்துகளை முன்வைத்தால் அதற்கு செவி தாழ்த்துவோம்.

பொறுப்பை, வெளிநாட்டு நிறுவனங்களின் கைகளுக்கு ஒரு போதும் ஒப்படைக்க மாட்டோம். பிரச்சினைகளுக்கு நாமே தீர்வுகளைப் பெற்றுக் கொள்வோம். அதன் முன்னேற்றம் குறித்து வெளிநாடுகளுக்கு தெளிவு படுத்துவோம். எமது கடமை, பொறுப்பு என்பவற்றை வேறு யாருக்கும் தாரை வார்க்க தயாராக மாட்டோம்.

13 ஆவது அரசியல் திருத்தம், திருகோணமலை எண்ணெய் குதம் உட்பட எந்த விடயத்தையும் இந்திய வெளியுறவு செயலாளர் வலியுறுத்தவில்லை. அவர் தனி ஒரு விடயத்தை மட்டும் இலக்காக வைத்து இங்கு விஜயம் செய்யவில்லை. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே நிறைய பௌத்த சமய கலாசார தொடர்புகள் உள்ளன.

> நல்லிணக்கம் தொடர்பான கொள்கைகளை நாமே வகுத்துக் கொள்ள வேண்டும். 30 வருடம் யுத்தம் நடந்து, அது முடிவடைந்த பின்னர் நிச்சயமாக பிரச்சினைகள் உருவாகத்தான் செய்யும். அது தொடர்பாக என்ன நடவடிக்கை எடுப்பதென்பதை பாராளுமன்றமும் எமது அமைப்புகளுமே முடிவு செய்ய வேண்டும்

# இலங்கை தேயிலை சுவைபார்ப்பு அமர்வு ரோயல் மருத்துவமனையில் ஏற்பாடு







பிரித்தானிய இராணுவத்தின் புகழ்பெற்ற வீரர்களின் சேவையைப் பாராட்டும் நல்லெண்ணத்தின் வெளிப்பாடாக, இலங்கை தேயிலையை சுவைபார்க்கும் அமர்வொன்று ரோயல் மருத்துவமனை செல்சியாவில் இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தால் 2021 செப்டம்பர் 30ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டது. இங்கிலாந்துடனான நீண்டகால இருதரப்பு உறவுகளுக்கான இலங்கையின் உறுதிப்பாட்டுக்கான அடையாளமாக இந்த நிகழ்வு விளங்குகின்றது.

முன்னர் இலங்கையில் தேயிலைச் சுவைபார்ப்பாளராக செயற்பட்டவரும், தற்போது சர்வதேச தேயிலைக் குழுவில் இடம்பெறுபவருமான மனுஜ பீரிஸால் தேயிலை சுவைபார்ப்பு நடத்தப்பட்டது. இலங்கையின் ஏழு பிராந்தியங்களான நுவரெலியா, உடப்புஸ்ஸல்லாவ, திம்புல, ஊவா, கண்டி, சபரகமுவ, ருஹுனு ஆகியவற்றின் தனித்துவமான சுவைகள், வாசனை வகைகளை பங்கேற்பாளர்கள் கண்டறிந்தனர். அவர்களது விருப்பத்திற்கேற்ப புதிதாகத் தயாரிக்கப்பட்ட சாயமூட்டப்பட்ட தேநீர் கோப்பையையும் சுவைத்தனர்.

இந்த நிகழ்வின் போது, அடுத்த விடுமுறைக்கான தளமாக இலங்கை காட்சிப்படுத்தப்பட்டதுடன், சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கையில் காணப்படும் பார்வையிடத்தக்க தளங்களும் காட்சிப்படுத்தப்பட்டன. பங்கேற்பாளர்களுக்கு சிலோன் டீ பொதிகள், தேயிலை முகமூடிகள், சுற்றுலா நினைவுப் பரிசு ஆகியன வழங்கப்பட்டன.

ஜோன் பைர்ன் மற்றும் ஜிம் லிட்டில் ஆகியோரின் வரலாற்று முக்கியத்துவத்தை விளக்கும் வகையிலான மருத்துவமனையைச் சூழ இடம்பெற்ற சுற்றுப்பயணம் ஒன்றில், இங்கிலாந்திற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேன, உயர்ஸ்தானிகராலயத்தின் இராஜதந்திர அதிகாரிகள் பங்குபற்றினர்.

1815இல் வோட்டர்லூ போரில் காலையில் தேநீர் தாராளமாக விநியோகிக்கப்பட்டது என்ற தகவல்களுடன், தேநீர் பருகுவதானது பிரித்தானிய இராணுவத்தில் நீண்டகாலமாக நிறுவப்பட்ட பாரம்பரியமாகும். 1942ஆம் ஆண்டில் அனைத்து வகையான தேயிலைகளையும் சந்தையில் கொள்வனவு செய்து, பிரித்தானிய அரசாங்கம் குறித்த பாரம்பரியத்தை அதிகாரப்பூர்வமாக்கினர். சிலோன், அசாம், ஆபிரிக்காவிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வலுவான கறுப்புத் தேயிலையையே பிரித்தானிய அரசாங்கம் இராணுவத்திற்காக கொள்வனவு செய்திருந்தது.

1692இல் நிறுவப்பட்ட ரோயல் மருத்துவமனை செல்சியாவானது, கொரியா, போல்க்லாந்து தீவுகள், சைப்ரஸ், வடக்கு அயர்லாந்து ஆகிய நாடுகளிலும், இரண்டாம் உலகப் போரிலும் பணியாற்றிய பிரித்தானிய இராணுவத்தின் சுமார் 300 வீரர்களுக்கான ஒய்வு இல்லமும் முதியோர் இல்லமும் ஆகும்.

# சுப்ரமணியன்சுவாமி வந்தடைந்தார்



பாரதிய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவரும், முன்னாள் அமைச்சருமான சுப்ரமணியன்சுவாமி, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை இன்று காலை வந்தடைந்தார்.

அவரை, விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ சானக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும் பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் ஆகியோர் வரவேற்றனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில், அலரிமாளிகையில் நேற்றுமாலை நடைபெற்ற நவராத்திரி விழாவிலும் சுப்ரமணியன்சுவாமி கலந்துகொண்டார்.

அத்துடன், இலங்கை இராணுவத்தின் 72ஆவது நிறைவையொட்டி நடத்தப்படும் இராணுவ கருத்தரங்கிலும் அவர் உரையாற்றவுள்ளார்.

### இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனை நோர்வே, நெதர்லாந்து நாட்டு

# தூதுவர்கள் சந்தித்தனர்

■ வ.சக்தி, க.விஜயரெத்தினம்





மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்ட நோர்வே, நெதர்லாந்து நாடுகளின் தூதுவர்கள், பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனை, மட்டக்களப்பிலுள்ள அவரது அமைச்சின் அலுவலகத்தில் நேற்று (12) சந்தித்தனர்.

நோர்வே நாட்டுத் தூதுவர் டிரின் ஜொரான்லி எஸ்கெடல், நெதர்லாந்து நாட்டுத் தூதுவர் டஞ்ஜா கொங்கிரிஜ்ப் ஆகிய இருவரும் இதன்போது இராஜாங்க அமைச்சருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள், அபிவிருத்திப் பணிகள், அரசியல் சார்ந்த செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

அத்தோடு, பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புதல், நிலையான வாழ்வாதார வழிவகைகள், கிராமிய மட்ட உட்கட்டமைப்பு விடயங்கள் உள்ளிட்ட மேலும் பல விடயங்கள் தொடர்பிலும் இராஜாங்க அமைச்சர் கலந்துரையாடினார்.

இவற்றுக்கான சாதகமான பதில்களை இரு நாட்டுத் தூதுவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாக இராஜாங்க அமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

### எரிபொருளுடன் சென்ற

# கொள்கலன் விபத்து; சாரதி படுகாயம்

■ எஸ்.எஸ்.குமார்,கதிரவன், எப்.முபாரக்





திருகோணமலையிலிருந்து எரிபொருள் ஏற்றிச் சென்ற கொள்கலன் ஒன்று, நேற்று (12) அதிகாலை விபத்துக்குள்ளாதில் அதன் சாரதி பலத்த காயங்களுடன் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையில் அமைந்துள்ள இந்திய எரிபொருள் கூட்டுத்தாபனத்திலிருந்து எரிபொருள் ஏற்றிச் சென்ற கொள்கலனே இவ்வாறு விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளான குறித்த கொள்கலன், பாலம் ஒன்றையும் உடைத்துக்கொண்டு, திருகோணமலை - கண்டி பிரதான வீதியில் குடைசாய்ந்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யானைகள் அட்டகாசம்

■ எம்.ஏ.றமீஸ்





அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களில் நேற்று (12) அதிகாலை உட்புகுந்த காட்டு யானைகள், பல்வேறான சேதங்களை ஏற்படுத்தியதால், தாம் மிகுந்த அச்ச நிலையில் உள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதிகாலை 6 மணியளவில் அக்கரைப்பற்று சிறிய அட்டாளைச்சேனை, சம்புநகர் ஆகிய பிரதேசங்களுக்குள் உட்புகுந்த காட்டு யானைகள் சில, அப்பிரதேசங்களில் இருந்த பயன்தரும் சுமார் 30க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள், மா மரங்கள் போன்றவற்றைத் துவம்சம் செய்துள்ளன.

இதுதவிர, மக்கள் குடியிருப்புகள் சிலவற்றுக்கு சேதத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், வர்த்தக நிலையம் ஒன்றையும் பாரியளவில் உடைத்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, அக்கரைப்பற்று தேசிய பாடசாலையின் சுற்று மதிலை மூன்றாவது முறையாகவும் காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளதாக பாடசாலைச் சமூகத்தினர் சுட்டிக்காட்டினர்.

காட்டு யானைகளின் தொல்லைகளிலிருந்து பாதுகாத்து, தம்மை நிம்மதியாக வாழச் செய்ய சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# மத்தியஸ்த நல்லிணக்கம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்



மட்டக்களப்பு மாவட்டத்தில் காணி மத்தியஸ்தம் ஊடாக சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வேலைத்திட்டம், லிப்ட் நிறுவனம் யு.எஸ். ஐட் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு, காத்தான்குடி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று (12) நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வில் லிப்ட் நிறுவனத்தின் தலைவர் ஞா.முரளிதரன், மட்டக்களப்பு மாவட்ட காணி விசேட மத்தியஸ்த சபையின் தவிசாளர் கே.குருநாதன், காத்தான்குடி பிரதேச செயலக உதவி உதவிப்பிரதேச செயலாளர் திருமதி எம்.எஸ்.சில்மியா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

வளவாளராக பி.முரளிதரன் கலந்துகொண்டு, வேலைத்திட்டம் தொடர்பான விளக்கங்களை வழங்கினார்.

இந்த வேலைத்திட்டம் காத்தான்குடி, ஆரையம்பதி, கிரான் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதில் காணி விசேட மத்தியஸ்த சபையை பலப்படுத்தல், கிராம மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தல், காணி தொடர்பான பிரச்சினைகளை சமரசமாக தீர்த்து வைத்தல், காணி மத்தியஸ்தம் ஊடாக சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் போன்ற செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

### ரயில் கடவையில் கார் விபத்து;

# பொலிஸ் அதிகாரி ஸ்தலத்தில் பலி

■ எப்.முபாரக்



திருகோணமலை, கந்தளாய் ரயில் கடவையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பயணித்த கார் மோதி விபத்துக்குள்ளானதில் பொலிஸ் அதிகாரியொருவர் ஸ்தலத்திலே உயிரிழந்துள்ளதோடு, காரின் சாரதியும் பொலிஸ் உத்தியோகத்தருமான மற்றொருவர் படுகாயங்களுடன், கந்தளாய் வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் (11) இரவு 11 மணியளவில் இடம்பெற்றுள்ள இந்த விபத்தில், மாத்தளை பகுதியைச் சேர்ந்த டி.எல் சிறிசேன (55 வயது) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார் என கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையிலிருந்து கந்தளாய்க்குச் சென்ற கார் ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட போதே இவ்வாறு விபத்துக்குள்ளானதாகவும் சாரதிக்கு ஏற்பட்ட நித்திரைக் கலக்கமே, இந்த விபத்துக்கு பிரதான காரணமென ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து அறியமுடிகின்றதெனவும், கந்தளாய் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

### இந்திய இழுவைப் படகுகளை இனி

# தாக்குவோம்

■ விஜயரத்தினம் சரவணன்





இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடருமானால், நிச்சயமாக எமது மீனவர்கள் அனைவரும் திரண்டு, இந்திய மீனவர்கள் மீது மிகவிரைவில் தாக்குதல் நடத்துவோம் என, முல்லைத்தீவு மீனவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர்கள், ஒக்டோபர் 10ஆம் திகதியன்று, ஏறக்குறைய 30 இந்தியன் இழுவைப்படகுகள் வருகைதந்து, அத்துமீறிய சட்டவிரோத தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த முல்லைத்தீவு மீனவர்களின் 15க்கும் மேற்பட்ட படகுகளின் வலைகள் சேதமாக்கியதாகவும் தெரிவித்தனர்.

கடந்த வருடம் இந்தியன் இழுவைப் படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகளைக் கண்டித்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்துக்குப் பின்னர் ஆறு மாத காலமளவில் முல்லைத்தீவு கடற்பரப்பிற்கு இந்தியன் இழுவைப்படகுகளின் வருகை இல்லாமல் இருந்தது. ஆனால், தற்போது முல்லைத்தீவு கடற்கரையிலிருந்து இரண்டு கடல்மைல் தூரமளவில், இந்திய இழுவைப் படகுகள் வருகை தருவதுடன், எமது மீனவர்களின் வலைகளும் இந்தியன் இழுவைப் படகுகளால் சேதமாக்கப்படுகின்றன எனவும், அவர்கள் சாடினர்.

கடந்த காலங்களில் கடற்றொழில் அமைச்சர்களாக இருந்த பெரும்பான்மை இனத்தவர்கள், மீனவர்களின் பிரச்சினைகள் சிலவற்றுக்கு தீர்வுகளை பெற்றுத்தந்திருக்கின்றனர். தற்போது கடற்றொழில் அமைச்சராக இருக்கும் டக்ளஸ் தேவானந்தா, தற்போது இடம்பெறுகின்ற இந்த இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் குறித்து தம்மோடு கலந்துரையாடுவதுமில்லை, இங்கு வருவதுமில்லை எனவும், மீனவர்கள் குற்றஞ்சாட்டினர்.

டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் அமைச்சு பொறுப்பை ஏற்ற பின்னரே, இந்திய மீனவர்களின் வருகை அதிகரித்துள்ளதுடன், கடற்படையினரும் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை எனவும், மீனவர்கள் சாடினர்.

### இந்திய மீனவர்களுக்கு எதிராக

# போர்கொடி தூக்குவோம்

■ செ.கீதாஞ்சன்



வடக்கு கடற்பரப்பில் தொடரும் இந்திய இழுவைப் படகுகளால் ஏற்படும் சொத்து இழப்புக்கு ஈடுசெய்ய முடியாத அரசாங்கம், இந்திய மீனவர்களை கட்டுப்படுத்த தவறினால், யாழ்ப்பாணக் கடற்றொழிலாளர்களுடன் இணைந்து, முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் போராட்டத்தை மேற்கொள்ளவர் என்று, கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர் மோ.விக்னா குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில், அவர் நேற்று (12) விடுத்துள்ள அறிக்கையிலேயே, இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

### தீர்வைப் பெற்றுத்தராமல் உள்நுழைந்தால்

# அடித்து விரட்டுவோம்

■ எஸ்.நிதர்ஷன்

இந்திய இழுவைப் படகையும் தடைசெய்யப்பட்ட அனைத்து தொழில்களையும் உடனடியாக நிறுத்தும் வரை, எந்தவோர் அரசியல் கட்சிகளும் தமது எல்லைக்குள் உட்பிரவேசிக்க வேண்டாம் என, பருத்தித்துறை, முனை கடற்றொழிலாளர்கள் அறிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் (11), முனை கடற்றொழிலாளர்கள் முன்னெடுத்த எதிர்ப்பு போராட்டத்தின் போதே, இவ்வாறு அறிவித்துள்ளனர்.

அத்துடன், அரசியல் கட்சிகள், தமது அறிவித்தலை மீறி தமது இடத்துக்கு வரும் பட்சத்தில், மக்களால் அடித்து விரட்டப்படுவார்கள் என்பதனையும் தாம் உறுதியாக, மனவருத்தத்துடன் அறியத்தருவதாகவும், அப்பகுதி மீனவர்கள் எச்சரித்துள்ளனர்.


அது மாத்திரமின்றி, தங்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்கு யாரும் முன்வராவிட்டால், தாங்கள் மனித வெடிகுண்டுகளாக மாறி, தங்களுடைய பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ளுவோம் எனவும், தெரிவித்துள்ளனர்.



# பயனாளிகளிடம் கையளிப்பு










முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுகளில், 64ஆவது படைப்பிரிவினரால், தனது படைப்பிரிவு பகுதியில் மக்களின் நலன்கருதி, சுமார் பத்து இலட்சம் ரூபாய் பெறுமதியான குடிநீர் திட்டங்களும் பல்வேறு கொடையாளர்களால் வழங்கப்பட்ட 60 இலட்சம் ரூபாய் நிதியில் இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்ட நான்கு குடும்பங்களுக்கான நிரந்தர வீடுகளும் நேற்று (12) கையளிக்கப்பட்டன. (படப்பிடிப்பு: சண்முகம் தவசீலன்)

### சட்டவிரோத மணல் அகழ்வை நிறுத்தக் கோரி

# தவிசாளரால் வழக்குத் தாக்கல்

■ எஸ்.றொசேரியன் லெம்பட்



நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அருவியாற்று, பரிகாரி கண்டல் கிராம அலுவலர் பிரிவில், இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வுக்கு எதிராக, மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் திருச்செல்வம் பரஞ்சோதியால், நேற்று (12) காலை, இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தொடுநர் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி பாராளுமன்ற உறுப்பினர் எம்.எம்.சுமந்திரன் தலைமையிலான சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

இதன் போது, எதிர்வரும் 29ஆம் திகதி, குறித்த பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபடுகின்ற நிறுவனத்தினரை மன்னார் நீதிமன்றத்துக்கு வருமாறு அழைப்பாணை விடுத்து, நீதவான் உத்தரவிட்டு, அன்றைய தினத்துக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

## பதுளையில் டெங்கு நோயாளர்களின்
# எண்ணிக்கை அதிகரிப்பு

■ பாலித ஆரியவன்ஸ

பதுளை சுகாதார வைத்திய அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அதிகமாக டெங்கு நோய்க்குள்ளானவர்கள் சிறுவர்களும் இளைஞர்களும் என பதுளை சுகாதார வைத்தியஅதிகாரி துசித குணதிலக தெரிவித்தார்.

இதில் அதிகமானவர்கள் கல்கந்த, கருணாபுர, பதுளைபிட்டிய, தொலபோகாவத்த, பின்னலந்த, மெதபதன ஆகிய இடங்களிலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார்.

எனவே, டெங்கு காய்ச்சலில் இருந்து பாதுகாப்புப் பெற, சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்பது அவசியம் என்றார்.

இதேவேளை சுகாதார பரிசோதகர்கள், கொரோனா ஒழிப்பு தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதால், டெங்கு பரிசோதனை தொடர்பில் ஈடுபடும் நடவடிக்கைகள் குறைந்துள்ளதாகத் தெரிவித்த அவர், மீண்டும் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கான செயற்பாடுகளில் சுகாதார பரிசோதகர்கள் ஈடுபட உள்ளனர் என்றார்.

## அகில இலங்கை சமாதான நீதவானாக
# பிரசாந்த் சர்மா சத்தியப்பிரமாணம்

■ பி.கேதீஸ், நீலமேகம் பிரசாந்த்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் தலவாக்கலையை வசிப்பிடமாகவும் கொண்ட தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் கோவிலின் பிரதம குருக்கள் பிரசாந்த் சர்மா, தீவு முழுவதற்குமான அகில இலங்கை சமாதான நீதவானாக கடந்த 8ஆம் திகதி, நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஜி.ஜி.ஜி.ஜெயசிங்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

முத்துசாமி ஐயர், அமரர் சந்திரகுமாரி தம்பதிகளின் புதல்வரான இவர் பம்பலபிட்டி இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீ வித்தியா குரு குலத்தில் வேதாகம கல்வியை கற்றவரும் ஆவார்.

மேலும் இவர் சர்வதேச இந்து மத பீடத்தின் நிர்வாக உறுப்பினரும் நுவரெலியா மாவட்ட சர்வமத செயற்குழு, தேசிய சமாதானப் பேரவையின் உறுப்பினரும் ஆவார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தோட்டக் கமிட்டி தலைவர்களுடன்
# செந்தில் தொண்டமான் சந்திப்பு



பண்டாரவளை, பள்ளகெட்டுவ, ஹப்புத்தளை, வெலிமடை ஆகிய பகுதிகளை சேர்ந்த தோட்டக் கமிட்டி தலைவர்களைச் சந்தித்து, பெருந்தோட்டப் பகுதிகளில் தொழிலாளர்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து இ.தொ.காவின் உபதலைவரும் பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் கலந்துரையாடினார்.

பண்டாரவளை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில், ஹல்துமுல்ல பிரதேச சபை தலைவர் அசோக்குமார், ஊவா மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்களான கணேசமூர்த்தி, சிவலிங்கம், பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்

இதன்போது தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக, உடனடியாக தோட்ட நிர்வாகங்களுடன் கலந்துரையாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

## “இராணுவத்தினரை பெருந்தோட்டப் பகுதிகளுக்கு அழைப்பதை
# ஏற்றுக்கொள்ள முடியாது”
### முன்னாள் எம்.பி சதாசிவம் தெரிவிப்பு

■ பி.கேதீஸ்



பெருந்தோட்ட நிர்வாகிகளை பாதுகாப்பதற்காக, இராணுவத்தினரை பெருந்தோட்ட பகுதிகளுக்கு அழைப்பதை எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது என இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுப்பையா சதாசிவம் தெரிவித்துள்ளார்.

எனவே, தோட்ட நிர்வாகங்கள், பாதுகாப்புக்காக இராணுவ பாதுகாப்பைக் கோரி, அரசாங்கத்துக்கு எழுதிய கடிதத்தை உடனடியாக வாபஸ் பெறவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக, பெருந்தோட்ட கம்பனி நிவாகிகளின் நிறைவேற்றும் அதிகாரியும் பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் ஊடக பேச்சாளருமான ரொசான் ராஜதுரைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாவது,

பெருந்தோட்டங்களை ஆங்கிலேயர்கள் நிர்வகித்த பொழுது தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களை பாதுகாத்தனர். தொழிலாளர்கள் தோட்டங்களையும் தோட்ட நிர்வாகிகளையும் பாதுகாத்தனர். அந்த காலப்பகுதியில் தொழிலாளர்களும் நிர்வாகிகளும் ஒரு புரிந்துணர்வோடு செயற்பட்டனர். ஆனால் இப்பொழுது தொழிலாளர்களுக்கு வேலை பழு அதிகரிக்கபட்டதாலும் அதிகரிக்கப்பட்ட சம்பளமும் தொழிலாளர்களுக்கு முறையாக கிடைக்காததாலும் தொழிலாளர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் இடையில் அடிக்கடி முரண்பாடுகளும் வாக்குவாதங்களும் ஏற்படுகின்றன.

தற்பொழுது அரசாங்கத்தால் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட்ட பின்னர் தோட்ட நிர்வாகங்கள் தொழிலாளர்களை மனிதர்களாக நினைப்பதில்லை. ஏற்கெனவே கூட்டு ஒப்பந்தத்தில் தொழிலாளர்களுக்கு வழங்கிய சலுகைகள் இப்பொழுது வழங்கப்படுவதில்லை. தொழிலாளர்களை கொத்தடிமைகளாக வைத்திருக்கின்றார்கள்.

கொத்தடிமைகளாக இருக்கும் தொழிலாளர்களை மேலும் பயமுறுத்தி அடிமைகளாக்க தோட்ட நிர்வாகிகளின் பாதுகாப்பிற்காக இராணுவத்தை கொண்டு வருவதற்கு தோட்ட நிர்வாகங்கள் முயற்சிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



### பிரேமோர் தோட்டத்தில் சிறுவர் தினம்

சர்வதேச சிறுவர்– முதியோர் தினத்தையொட்டி, அக்கரபத்தனை பிரேமோர் தோட்டத்தில் இயங்கும், சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் வீரன் ஜெயலட்சுமி தலைமையில், ஞாயிற்றுக்கிழமை (10) சிறுவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் சித்திரப் போட்டி நடத்தப்பட்டது. அத்தோடு, ‘சூழலைப் பாதுகாப்போம்; சுத்தமான காற்றை சுவாசிப்போம்’ என்ற தலைப்பில் மரக்கன்றுகளும் சிறுவர்களால் நாட்டப்பட்டன. (துவாரக்ஷான்)

## மத்திய மாகாண பாடசாலை மாணவர்களுக்காக
# உளநல வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது



■ நதீக தயா பண்டார

பாடசாலைகள் திறக்கப்பட்டதும் செயற்றிறனில் பின்னடைவை சந்தித்துள்ள மாணவர்களுக்காக உளநல வேலைத்திட்டம் ஒன்றை, மத்திய மாகாணத்துக்குள் செயற்படுத்தவுள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மத்திய மாகாண ஆளுநர் லலித்.யூ.கமகேவின் ஆலோசனைக்கமைய, மத்திய மாகாண கல்வி அமைச்சு, மாகாண கல்வி திணைக்களங்கள், பேராதனை பல்கலைக்கழகத்தின் பங்களிப்புடன் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தெளிவுப்படும் மற்றும் மத்திய மாகாண பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (11) இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே, மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றால் பாடசாலைகள் நீண்டகாலம் மூடப்பட்டுள்ளதால், அவர்களை மீண்டும் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தவும் அவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கான சிறந்த மனநிலையை ஏற்படுத்தும் நோக்கில் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என மத்திய மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதற்கு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோரின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த மாதம் 21ஆம் திகதி, மத்திய மாகாணத்தில் 200 மாணவர்களுக்கு குறைந்த மாணவர் தொகையைக் கொண்ட 850 பாடசாலைகளை திறக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துயள்ளார்.

## இடிதாங்கி மோசடி
# சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

■ ஆர். ரமேஸ்

இலங்கையிலிருந்து உக்ரைன் நாட்டுக்கு இடிதாங்கிகளை விற்பணை செய்து தலா நூறு கோடி பணம் தருவதாக கூறி, ஒரு கோடியே 33 லட்சத்து 60 ஆயிரம் (1,33,60,000) ரூபாவை மோசடி செய்த, ஒன்பது பேர் அடங்கிய குழுவினரை, இம்மாதம் (25) ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நுவரெலியா மாவட்ட நீதவான் டி.ஜீ பிரதீப ஜயசிங்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நுவரெலியா பொலிஸ் தலைமையக சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்தி யூ உடுகமசூரியவுக்கு கிடைத்த, தகவலுக்கமைய ஐ.பி.அபேசிங்க, ஐ.பி. ஹடிடியாராச்சி தலைமையில் நியமிக்கப்பட்ட, பொலிஸார் குறித்த ஒன்பது சந்தேக நபர்களையும் நுவரெலியாவில் உள்ள உல்லாச விடுதி,பஸ்தரிப்பு உள்ளிட்ட வெவ்வேறு இடங்களில் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட ஒன்பது சந்தேக நபர்களையும் நுவரெலியா குற்றத்தடுப்பு பொலிஸார், நேற்று முன்தினம் (11) மாலை நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நீதவான் டி.ஜீ பிரதீப ஜயசிங்க முன்னையில் ஆஜர் செய்தனர்.

இதன்போது, வழக்கு விசாரணையை எடுத்துக்கொண்ட நீதவான் சந்தேகநபர்களை எதிர்வரும் (25) திகதி திங்கட்கிழமை வரை 14 நாட்களுக்கு விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## பாம்புக் கடிக்கு உள்ளான தொழிலாளி
# வைத்தியசாலையில் அனுமதி

■ எம்.கிருஸ்ணா

ஹட்டன் -சமர்வில் கீழ் பிரிவு தொழிலாளி பாம்புக்கடிக்குள்ளாகி, டிக்கோயா- கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, தொடர்ந்து சிகிச்சைப் பெற்று வருகின்றார்.

கொழுந்து பறித்துக்கொண்டிருந்த பெண் தொழிலாளி ஒருவரே, நேற்று முன்தினம் (11) மாலை பாம்புக்கடிக்கு உள்ளாகியுள்ளார்.

இதேவேளை, சமர்வில் கீழ் பிரிவு தலைவர்கள் மற்றும் தொழிலாளர்கள் நேற்று (12) காலை தோட்ட முகாமையாளருடன் பேச்சுவாத்தையில் ஈடுபட்டு, காடுகளாகியுள்ள தேயிலை மலைகளை துப்புரவு செய்யவேண்டும் என கோரிக்கை முன்வைத்தனர்.

இதனையடுத்து. தோட்ட முகாமையாளர் உடனடியாக தேயிலை மலைகளை துப்புரவு செய்வதாக தொழிலாளர்களிடம் உறுதியளித்ததையடுத்து, தொழிலாளர்கள் பணிகளுக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

## அதிபர்–ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைக்கு
# பிரதேச சபை தவிசாளர் எதிர்ப்பு

■ மஹேஸ் கீர்த்திரத்ன

கடந்த 90 நாள்களாக ஆசிரியர்கள் முன்னெடுத்து வரும் தொழிற்சங்க நடவடிக்கைகு எதிர்ப்பு தெரிவித்து, உக்குவளை பிரதேச சபையின் தவிசாளர் டி.டபிள்யு. வேதியரத்னவால் நேற்று (12) எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நேற்று (12) காலை உக்குவளை பிரதேச சபை முன்பாக இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் தவிசாளருடன், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உக்குவளை பிரதேச சபை உறுப்பினர்கள் நால்வரும் இணைந்துகொண்டனர்.



# பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் திறந்த மனமே சிறந்த திறவுகோல்

பிரச்சினைகளை மனம்விட்டுப் பேசவேண்டும். ஏனைய தரப்பினரையும் இணங்கச் செய்யவேண்டும். இல்லையேல் அடுத்தடுத்த தலைமுறையினருக்கு பிரச்சினைகள் விட்டுச்செல்லப்படும் என்பது மட்டுமே கடந்தகால படிப்பினையாகும்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில், புரையோடிப்போயிருக்கும் தேசிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, திறந்த மனத்துடன் அணுகவேண்டும். கடந்தகால ஆட்சியாளர்களும் சரி, தற்போதைய ஆட்சியிலும் சரி, உள்ளொன்றை வைத்துக்கொண்டு புறத்தில் காய்நகர்த்தல்கள் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கை இராணுவத்தின் 72ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, புதிய அரசியலமைப்பு மற்றும் புதிய தேர்தல் முறைமை தொடர்பில் பரிந்துரைத்துள்ளார். ஜனாதிபதியாக தெரிவானதன் பின்னர், அரசியல் பிரச்சினையைச் சீர்தூக்கிப் பார்த்திருக்கும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 47ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, புலம்பெயர் அமைப்புகளுடன் பேச்சுவார்த்தைக்குத் தயாரென அழைத்தமை வரவேற்கப்பட்டது. ஆனால், புலம்பெயர் அமைப்புகள், நபர்கள் மீது தடை விதிக்கப்பட்டிருக்கும் நிலையில், அவ்வழைப்பைப் பலரும் கடுமையாக விமர்சித்திருந்தனர். "கதவுகளை மூடி வைத்துக் கொண்டு, விருந்துக்கு அழைப்பது" போல் எனத் தெரிவித்திருந்தனர்.

அதேபோல, தமிழ்த் தேசிய கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைக்கும் இன்னுமே திகதி குறிக்கப்படவில்லை. ஆனால், ஐ.நாவிலிருந்து விடுக்கப்பட்ட அழைப்பு, காலத்தையும் நேரத்தையும் வீணடித்து, தீர்வுக்கான பாதையை நீட்டித்துக்கொண்டே செல்வதற்கான ஒரு யுத்தியென பலரும் கூறியிருந்தனர்.

இலங்கையை, சர்வதேசம் பல வழிகளிலும் நெருக்கிக்கொண்டே இருக்கிறது. ஆகையால்தான், பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளும் செயற்பாடும் புதிய அரசியலமைப்பு குறித்த அறிவிப்பும் வெளியாகியிருக்கிறது.

நல்லாட்சி அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்புக்கான செயற்பாட்டின் போது, அன்று எதிரணியில் இருந்துகொண்டு, அதில் பங்கேற்காமல் இருந்த இன்றைய ஆட்சியாளரும் அதன் பங்காளிகளும் 'பௌத்த மதத்துக்கு இழுக்கு', 'நாட்டைப் பிரிப்பதற்கான அரசியலமைப்பு' என்றெல்லாம் பிரசாரங்களைச் செய்தனர்.

இதை அடியொட்டிச் செல்வதற்கு, ஆட்சியிலிருப்போர் விரும்ப மாட்டார்கள். அப்படியொன்றைச் செய்தால், எதிரணியிலிருக்கும் சிலர், 'பௌத்த மதத்துக்கு இழுக்கு', 'நாட்டைப் பிரிக்கப்போகின்றனர்' என்ற கூப்பாட்டை போட்டுவிடுவர். கடந்தகாலங்களில், மாறிமாறி இவ்வாறான விசமத்தனமான பிரசாரங்களே முன்னெடுக்கப்பட்டன.

அதனால்தான், தமிழ்த் தரப்பும், "ஆட்சியாளர்கள் எங்களை ஏமாற்றிக்கொண்டே வந்துள்ளனர்; சர்வதேசத்தின் மத்தியஸ்தத்துடனேயே தீர்வு வேண்டும்" என ஒற்றைக்காலில் நிற்கின்றனர். இந்நிலையில், இவ்வாட்சியில் புதிய அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கான வேகம் எவ்வாறிருக்கும் என்பதற்கெல்லாம் காலமே பதில் சொல்லும்.

சகல தரப்பினரும் திறந்த மனத்துடன் செயற்பட்டிருந்தால் கடந்த 12 ஆண்டுகளுக்குள் எத்தனையோ பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கண்டிருக்கலாம். ஆக, தீர்வு விடயத்தில் திறந்த மனமே ஒரேயொரு திறவுகோல்; அதைப் பயன்படுத்தாத வரையில், 'தீர்வு கானல் நீர்' என்பதே எமது கணிப்பாகும்.


# தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்



www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

பலத்த இடியோசை; வானமே பிளந்துவிடுமாற்போல், சத்தங்கள் ஏற்பட்ட போதிலும், மௌனமாகத் தனது கடமைகளைச் செய்பவனே வல்லவன்.

எழுச்சியுடையோன் கவலைப்படவே மாட்டான். உலகின் அசைவுகள், சம்பவங்களை அறிந்து, அதுபற்றிப் பயம் இன்றி, எதிர்கொள்ளத் தயார் என்றால், சலனங்கள் அழிந்துபோய் விடும்.

எங்களை மீறி எதுவுமே நடக்காது என உணர்க! உலகம் துஷ்டசக்திகளுக்கு அடிமையல்ல. நல்லெண்ணம் கொண்ட எம்மை, எதுவும் செய்யாது என்ற மன வைராக்கியம் மகத்தானது.

உலகில் பல யுத்தங்கள் ஒன்று திரண்டு அச்சுறுத்தியிருந்தாலும் மானுடம் அழிந்ததா? இல்லையே; அப்புறம் ஏது பயம் வேண்டிக் கிடக்கின்றது? நடப்பது நடக்கலாம்; நடக்காமலும் போகலாம். வாழும் காலத்தில் மயக்கமும் கலக்கமும் ஏன்?

நல்லவற்றை ஏற்போம்; கெட்டவைகளை அழிப்போம். ஆனால், அன்பு நிலையை மட்டும் நிரந்தரமாக வைத்துக்கொள்வோம். இதை உறுதியுடன் ஏற்றுக்கொள்வோமாக! வாழும் நாள்கள், எமக்கும் உலகமக்களுக்கும் ஆனவை; அச்சமில்லாத அழகான வாழ்வை அமைத்திடுங்கள்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## 'பனாமா'வாலோ 'பண்டோரா'வாலோ

# எதுவும் நடக்கப்போவதில்லை



எம்.எஸ்.எம். ஐயூப்

உலகத்தில் இன்று, ஊழலுக்கு எதிரான மிகவும் பலமான சக்தியாக, ஊடகங்கள் மாறியிருக்கின்றன. அது, கடந்த வாரம் 'சர்வதேச புலனாய்வு ஊடகவியலாளர் ஒன்றியம்' வெளியிட்ட 'பண்டோரா பேபர்ஸ்' (பண்டோரா பத்திரங்கள்) மூலம் தெரிகிறது.

உலகின் பல நாடுகளில், அரசியல்வாதிகள், அரச தலைவர்கள் முக்கிய அதிகாரிகள் போன்றோர் இலஞ்சம், தரகு போன்ற பல்வேறு வழிமுறைகள் மூலம் சம்பாதிக்கும் சட்ட விரோத பணத்தை, வேறு சில நாடுகளில், பல்வேறு நிறுவனங்களிலும் வங்கிகளிலும் பதுக்கி வைக்கின்றனர். அதன்மூலம், அந்தப் பணத்தை எவ்வாறு சம்பாதித்தார்கள் என்பதை, தமது சொந்த நாடுகளின் வருமான வரி அதிகாரிகளுக்குத் தெரிவிக்காமல் தப்பித்துக் கொள்ள முடிகிறது. அத்தோடு, அப்பணத்தைப் பதுக்கி வைக்கும் நாடுகளில், அவர்களிடம் இருந்து வரி ஏதும் அறவிடப்படாது, அப்பணத்தை வைப்பில் வைக்கவும் வசதி கிடைக்கிறது.

இவ்வாறு, சட்ட விரோதமாகப் பணத்தை வெளிநாடுகளில் பதுக்கி வைத்த நூற்றுக்கணக்கான அரசியல்வாதிகள், அதிகாரிகள், அவர்களது உறவினர்கள் ஆகியோரின் விவரங்களையே, சர்வதேச புலனாய்வு ஊடகவியலாளர் ஒன்றியம் அம்பலப்படுத்தியுள்ளது. இதற்காக, ஒன்றியத்தின் ஊடகவியலாளர்கள், ஒரு கோடியே 19 இலட்சம் ஆவணங்களை ஆராய்ந்துள்ளனர். அவை 2.9 டெரா பைட் கணினி கொள்ளளவு கொண்டவையாகும்.

இவற்றின் மூலம், பல நாடுகளின் ஜனாதிபதிகள், பிரதமர்கள் போன்ற 35 அரச தலைவர்கள், 100க்கும் மேற்பட்ட வர்த்தகத்துறை பெரும் புள்ளிகள் உள்ளிட்ட பல்வேறுபட்ட செல்வாக்குள்ளவர்களின் ஊழல்கள் அம்பலப்படுத்தப்பட்டு உள்ளன.

இதற்கு முன்னர், 2016ஆம் ஆண்டும் இந்த ஊடகவியலாளர் ஒன்றியம், ஒரு தொகை ஆவணங்களை 'பனாமா பத்திரங்கள்' என்ற பெயரில் வெளியிட்டது. அப்போது ஒரு கோடியே 15 இலட்சம் ஆவணங்கள் வெளியிடப்பட்டன. அவற்றின் கணினி கொள்ளளவு 2.6 டெரா பைட்களாகும். எனவே, 'பண்டோரா' பத்திரங்களே, இதுவரை உலகில் வெளியிடப்பட்ட மிகப் பெரும் இரகசிய ஆவணங்கள் ஆகும்.

வெளிநாடுகளில் சொத்துப் பதுக்கல் தொடர்பாக, 'பனாமா பத்திரங்கள்' மூலம் 'அவன்ட் காட்' நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதி உள்ளிட்ட 65 இலங்கையர்கள் குற்றஞ்சாட்டப்பட்டு இருந்தனர். ஆனால், 'பண்டோரா பத்திரங்கள்' மூலம், இரண்டு இலங்கையர்களே இதுவரை குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபயவின் நெருங்கிய உறவினரும் ஜனாதிபதி மஹிந்தவின் அரசாங்கத்தில் நீர்வளத்துறை பிரதி அமைச்சராக இருந்தவருமான நிருபமா ராஜபக்ஷவும் அவரது கணவருமான திருக்குமார் நடேசனுமே அந்த இருவராவர்.

தமது விசாரணைகளின் போது, தாம் பெற்ற தகவல்களின் விவரங்களைத் தெரிவித்து, அது தொடர்பாக நிருபமாவினதும் நடேசனினதும் கருத்தைத் தெரிவிக்குமாறு கேட்டு, சர்வதேச புலனாய்வு ஊடகவியலாளர் ஒன்றியம் அவ்விருவருக்கும் கடந்த மாதம் 13 ஆம் திகதி, கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.

அந்தக் கடிதத்தின்படி, அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள 'ரொசெட்டி' என்ற வெளிநாட்டு நிறுவனம், இலங்கையில் பல்வேறு திட்டங்களை மேற்கொண்ட வேறு பல வெளிநாட்டு நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குவதன் மூலம் பணம் சம்பாதித்துள்ளதோடு, லண்டன், சிட்னி ஆகிய நகரங்களில் சொத்துகளை (வீடுகளை) விலைக்கு வாங்கியுள்ளது.

இந்தச் சொத்துகள், 'ரொசெட்டி' நிறுவனம் ஆகியவற்றின் உங்கள் உரிமம் தொடர்பாக, நீங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் போது, உரிய அரச அதிகாரிகளுக்கு அறிவித்தீர்களா என ஊடகவிலாளர் ஒன்றியம், நிருபமாவிடம் கேட்டுள்ளது.

அதேவேளை, உங்கள் நிறுவனத்தின் ஆலோசனை சேவையைப் பெற்ற அரச நிறுவனங்களுக்கு, உங்கள் நிறுவனத்தின் உங்கள் உரிமம் தொடர்பாக அறிவித்தீர்களா என்பது, மற்றொரு கேள்வியாகும். ஏனெனில், ஆலோசனை நிறுவனங்களை நடத்துவது சட்ட விரோதமானதல்ல; ஆனால், சொத்து விவரங்களை வெளியிடாமை சட்ட விரோதமாகும்.

நடேசன் தம்பதிகளுக்குச் சொந்தமானதென ஊடகவியலாளர் ஒன்றியம் குறிப்பிடும் பசிபிக் டிரஸ்ட் நிறுவனத்திடம், 51 மில்லியன் டொலர் பெறுமதியான கலைப் பொருட்கள் இருப்பதாகக் கூறும் ஊடகவியலாளர் ஒன்றியம், அந்தச் சொத்து விவரத்தை வெளியிட்டீர்களா என்பது, நிருபமாவிடம் கேட்ட மற்றொரு கேள்வியாகும்.

நடேசனுக்கு வெளிநாடுகளில் ஸ்ரீ நிதி டிரஸ்ட், பசிபிக் டிரஸ்ட், பசுபிக் கொமொடிட்டீஸ், பல்லீன், சலன் ஒயில், ரெட் ரூத் இன்வெஸ்ட்மன்ட் ஆகிய நிறுவனங்கள் இருப்பதாகவும் அவற்றில் நிருபமாவின் வகிபாகம் என்ன என்றும் கேட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு, நடேசன் குடும்பத்தின் சொத்துப் பெறுமதி 160 மில்லியன் டொலர் என்றும் 2017 ஆம் ஆண்டு ஸ்ரீ நிதி, பசிபிக் டிரஸ்ட் ஆகிய இரண்டு நிறுவனங்களின் மொத்த சொத்துப் பெறுமதி, 18 மில்லியன் டொலர் என்றும் கூறும் சர்வதேச ஊடகவியலாளர் ஒன்றியம், அச்சொத்துகளைச் சம்பாதித்த முறையை நடேசனிடம் கேட்டுள்ளது. ஆலோசனை சேவை வழங்கும் நிறுவனங்களை இலங்கையில் நிறுவாது, வெளிநாடுகளில் ஏன் நிறுவினீர்கள் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

சுமிடொமோ கோர்ப்பரேஷன், ஜேர்மன் நிறுவனமான கொன்டிராக்ட் ஜீ.எம்.பீ.எச் ஆகிய நிறுவனங்களுக்கு வழங்கிய ஆலோசனைகள் என்ன என்றும் அந்நிறுவனங்கள் இலங்கை அரசாங்கத்திடம் ஒப்பங்களைப் பெற்றுக் கொள்ள, ராஜபக்ஷ குடும்பத்துடனான உங்கள் உறவைப் பாவித்தீர்களா என்றும் நடேசனிடம் கேட்கப்பட்டுள்ளது.

ரொசெட்டி நிறுவனத்தின் மூலம், லண்டனிலும் சிட்னியிலும் 40 இலட்சம் டொலர் பெறுமதியான மாடி வீடுகள் விலைக்கு வாங்கப்பட்டு உள்ளதாகவும் அவற்றை சொந்தப் பெயரில் வாங்காது, ஒரு நிறுவனத்தின் பெயரில் வாங்கியது ஏன் என்பதும் லண்டன் சொத்திலிருந்து பெறப்பட்ட வருமானத்தை பணமாக (in cash) ஏன் பெற்றீர்கள் என்பதும் கேட்கப்பட்டிருந்த கேள்விகளாகும்.

ராஜ் ரவி வர்மா, ஜோர்ஜ் கீட் ஆகிய உலகப் புகழ் பெற்ற ஓவியர்களின் ஓவியங்கள் உள்ளிட்ட 40 இலட்சம் டொலர் பெறுமதியான 51 கலைப் பொருட்களை, சொந்தப் பெயரில் வாங்காது வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் பெயரில் கொள்வனவு செய்ததற்கான காரணத்தையும் அவற்றை, ஜெனீவாவில் வரி அறவிடாத களஞ்சியசாலையொன்றில் வைத்ததற்கான காரணமும் கேட்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு, மல்வானையில் பசில் ராஜபக்ஷவுக்காக காணியொன்றை விலைக்கு வாங்கியதைப் பற்றிய விவரங்கள் மற்றொரு கேள்வி மூலம் கேட்கப்பட்டுள்ளது. 2002ஆம் ஆண்டு முதல் 2007ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், நடேசனின் ரொசெட்டி நிறுவனம், அவரது ரெட் ரூத் இன்வெஸ்ட்மன்ட் நிறுவனத்துக்கு 140,000 டொலர் கடன் வழங்கி இருப்பதாகவும் ரெட் ரூத் அதைத் திருப்பி நடேசனின் ஸ்ரீ நிதி நிறுவனத்துக்கு வழங்கியதாகவும் கூறும் ஊடகவியலாளர்கள் ஒன்றியம், இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் என்ன என்றும், உங்களின் இந்த வருமானம் எங்கிருந்து கிடைத்தது என்றும் கேட்டுள்ளது.

இந்தக் கேள்விகள் மூலம், அவர்கள் ஊழல் என எதைக் கருதுகிறார்கள் என்பது தெளிவாகிறது. இப்போது ஜனாதிபதி கோட்டாபயவின் பரிந்துரைப்படி, இலஞ்ச ஆணைக்குழு இந்தத் தகவல்களைப் பற்றிய விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. ஆனால், கடந்த கால அனுபவங்களின் படி, எதுவும் நடக்கும் என்று கருத முடியாது. சிறிது காலத்தில், எல்லோரும் இதை மறந்துவிடுவார்கள்.

'பனாமா பத்திரங்கள்' வெளியான நாள்களில், குற்றஞ்சாட்டப்பட்ட 65 இலங்கையர்கள் தொடர்பாக விசாரணை நடத்தி, அவர்களுக்கு தண்டனை வழங்கப்படும் என, அப்போதைய நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறினார். ஆனால், ஒன்றுமே நடைபெறவில்லை.

ராஜபக்ஷர்களின் ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற எதுவும் பண்டோரா பத்திரங்களில் குறிப்பிடப்படவில்லை என ஆளும் கட்சியினர் கூறுகின்றனர். ஆனால், அந்தக் காலத்திலேயே இவை நடைபெற்றுள்ளன என்பது, சர்வதேச ஊடகவியலாளர்கள் ஒன்றியம் நடேசனுக்கும் நிருபமாவுக்கும் அனுப்பியுள்ள கடிதத்தின் மூலம் தெரிகிறது. இங்கு பிரச்சினை, ஊழல்கள் எந்தக் காலத்தில் இடம்பெற்றுள்ளன என்பதல்ல; அவை, உண்மையிலேயே இடம்பெற்றுள்ளனவா, அவற்றைப் பற்றி முறைப்படி விசாரணை நடைபெறுமா என்பதேயாகும்.

இலங்கையில் அரசியல்வாதிகளுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளில், அனேகமாக அவர்கள் குற்றவாளிகள் ஆவதில்லை. மத்திய வங்கி பிணைமுறி மோசடி மூலம், அரசாங்கம் 1,000 கோடி ரூபாய்க்கு மேல் நட்டத்தை அடைந்தது. அதற்கு வழிவகுத்த அரசியல்வாதிகளுக்கு எதிராக, எந்தக் குற்றச்சாட்டும் இல்லை.

யுக்ரெய்னிலிருந்து போர் விமானங்களைப் பெற்று, அதற்காக இல்லாத நிறுவனம் மூலம், இலங்கை அரசாங்கம் பணம் செலுத்தி உள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டது; ஆனால் குற்றவாளிகள் இல்லை. வடக்கு, கிழக்கில் வீடுகளை நிர்மாணிப்பதற்காக 'ராடா' என்றதொரு நிறுவனத்தை அமைத்து, பணமும் வழங்கப்பட்டது. ஆனால், வீடுகள் கட்டப்படவுமில்லை; பணமும் இல்லை; குற்றவாளிகளும் இல்லை.

இலங்கையின் 'நற்பெயரை' வளர்ப்பதற்காக முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், இமாத் சுபெய்ரி' என்ற ஒருவருக்கு 65 இலட்சம் டொலர் வழங்கியது. பின்னர், அவர் ஓர் ஊழல் பேர்வழி எனக் கூறி, அமெரிக்க நீதிமன்றம் ஒன்று அவருக்கு 12 வருட சிறைத் தண்டனை வழங்கியது. இங்கு அது தொடர்பாக விசாரணை இல்லை.

இதுபோன்ற நூற்றுக் கணக்கான பாரிய ஊழல் மோசடிகள், இலங்கையில் இடம்பெற்ற போதிலும் அவற்றுக்காக எவரும் தண்டிக்கப்படவில்லை. எனவே, பனாமா பத்திரங்களாலோ பண்டோரா பத்திரங்களினாலோ பெயர் குறிப்பிடப்பட்ட இலங்கையர்கள் அச்சப்படத் தேவை இல்லை.

## கடிதங்கள்



### 'மஞ்சள்' நீர்பருகும் இருதயபுர மக்கள்

திருகோணமலை மாவட்டம், மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட இருதயபுரம், பச்சைநூர் பகுதிகளில் வசிக்கும் மக்கள், சுத்தமான குடிநீர் இன்றிய அவலத்துடன் வாழ்ந்து வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆரம்ப காலம் தொட்டு, மஞ்சள் நிற கிணற்று நீரைப் பருகியதால், வயிற்றில் கல், வாந்தி பேதி, சிறுநீரக நோய் எனப் பல நோய்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கின்றனர். இக்கிராமத்தில், சுமார் 35 க்கும் அதிகமான குடும்பங்கள், கூலித் தொழிலை நம்பி வாழ்கின்றனர்.

குடி நீரைப் பெறுவதாக இருந்தால், ஒன்றரை கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மணல்சேனை கிராமத்துக்குச் செல்ல வேண்டியுள்ளதாகவும், இவ்வாறாக நீரைப் பெறுவதாக இருந்தால், மணல்சேனை கிராம கோவில் உண்டியலில் விரும்பிய தொகைப் பணத்தை போட்டு விட்டே, நீரைப் பெறவேண்டும் என்றும் ஓட்டோ மூலம் நீரைப் பெறுவதாக இருந்தால் 200 ரூபாய் கொடுக்க வேண்டியுள்ளதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

பலமுறை, உரிய அதிகாரிகளிடத்தில் குடி நீருக்கான கோரிக்கைகளை முன்வைத்த போதும் இன்றுவரைக்கும் தீர்வு எட்டப்படவில்லை; தொடராக ஏமாற்றமடைந்தது மாத்திரமே மிச்சம். எனவே, இருதயபுரம், பச்சைநூர் பகுதி கிராம மக்களுக்கு, சுத்தமான குடிநீரைப் பெற்றுத் தருமாறு, பாதிக்கப்படும் மக்கள் உரியவர்களிடத்தில் கோரிக்கை விடுக்கின்றனர்.

–ஹஸ்பர் ஏ ஹலீம்




## ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் (11) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில், எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில...

### 01.பொறிமுறையைச் சமர்ப்பித்தல்

இலங்கையின் தேசிய மரபுரிமைகளை திட்டவட்டமாக அடையாளங் காண்பதற்கான குறிகாட்டிகள் அல்லது பொறிமுறைகள் இன்மையால் மேலெழுந்துள்ள பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டு, இலங்கையின் கலாச்சார தனித்துவங்களை உறுதிப்படுத்தும் தொட்டுணரக்கூடிய (Tangible), தொட்டுணர முடியாத (Intangible) தேசிய மரபுரிமைகளை அடையாளங் காண்பதற்கு பொதுமக்களுடைய கருத்துக்களைக் கேட்டறிந்து பொறிமுறையொன்றை தயாரிக்கப்படவுள்ளது.

அதற்காக, குறித்த துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள்/கல்விமான்கள் அடங்கிய குழுவொன்றை நியமிப்பதற்காக 2021 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

அந்த தீர்மானத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளதுடன், இலங்கையர்களிடமுள்ள தேசிய மரபுரிமைகளை அடையாளங் காணல், ஆவணப்படுத்தல், பிரகடனப்படுத்தல், பாதுகாத்தல், ஒழுங்குபடுத்தல், கையகப்படுத்தல், ஆராய்ச்சிகளை நடாத்துதல் போன்ற நடவடிக்கைகளை சரியான வகையில் முகாமைத்துவப்படுத்துவதற்காக மையப்படுத்தப்பட்ட சுயாதீன நிறுவனக் கட்டமைப்பொன்றை நிறுவ வேண்டியதன் தேவை அதன் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த குழுவின் பரிந்துரைகளுக்கமைய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார விவகாரங்கள் அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 02.இணையத்தள (Cyber) பாதுகாப்பு தொடர்பான சட்டம் வகுத்தல்.

(அ) பாதுகாப்பான இணையத்தள (Cyber) ஏற்பாடுகள் எனும் பெயரிலான சட்டமூலம் தயாரித்தல்

இலத்திரனியல் தொடர்பாடல்களின் வளர்ச்சியால் தீவிரவாதக் குழுக்கள் மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் பயங்கரவாத செயற்பாடுகள், திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் சமூக விரோதச் செயல்களுக்காக இணையவெளி (Internet space) மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல்களைப் பயன்படுத்துவதற்கு தூண்டப்பட்டுள்ளனர்.

இணையவெளி (Cyber Space) மூலம் மேற்கொள்ளப்படும் இலத்திரனியல் தொடர்பாடல்கள் தேசிய பாதுகாப்புக்கு நேரடி விளைவுகளை ஏற்படுத்தும் காரணி எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

அதனால், முப்படையினர், பொலிஸ் மற்றும் ஏனைய பிரதிநிதித்துவ நிறுவனங்கள் தற்போது தத்தமது நிறுவன மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இணையத்தள (Cyber) பாதுகாப்பு அலகின் மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை மேலும் முறையான வகையிலும், வினைத்திறனாகவும் மேற்கொள்வதற்கு இயலுமான வகையில் தேவையான ஏற்பாடுகளை உள்வாங்கி தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கியதாக புதிய சட்டமொன்றை வகுப்பதற்கான தேவையுள்ளது.

(ஆ) இணையத்தள (Cyber) பாதுகாப்பு சட்டத்தை வகுப்பதற்காக சட்டமூலமொன்றைத் தயாரித்தல்

இணையத்தள (Cyber) பாதுகாப்பு மற்றும் அதற்கான நிறுவனக் கட்டமைப்பை உருவாக்குவது, தொழிநுட்ப அமைச்சின் விடயத்தலைப்பின் கீழ் காணப்படுகின்றது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு, தொழிநுட்ப அமைச்சு மற்றும் ஏற்புடைய ஏனைய தரப்பினர்களுடன் கலந்துரையாடிய பின்னர், பாதுகாப்புத் துறையின் இணையத்தள (Cyber) பாதுகாப்பின் ஏற்பாடுகள் உள்ளடங்கலாக மேற்படி (அ) பகுதியின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு வேறானதொரு சட்டமூலம் தயாரிப்பது உகந்ததெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்புக்கு ஏற்புடைய விடயங்கள் தவிர்ந்த தேசிய தகவல்கள் மற்றும் இணையத்தள (Cyber) பாதுகாப்பு மூலோபாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் சட்டம்மொன்றை தயாரித்தல், குறித்த பணிகளுக்காக ஏனைய பங்காள நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதற்காக ஏற்பாடுகளை வகுத்தல், நாட்டில் தீர்மானம் மிக்க முக்கியமான தகவல்கள் தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகளை அடையாளங் காணல், இணையத்தள (Cyber) பாதுகாப்புக்கு ஏற்படும் ஆபத்து நேர்வுகளுடன் கூடிய செயற்பாடுகளைத் தடுத்தல் மற்றும் நாட்டில் முறையான இணையத்தள (Cyber) பாதுகாப்புச் சூழலை உருவாக்குதல் போன்ற நோக்கங்களை அடைவதற்காக புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அதற்கமைய, பாதுகாப்பு அமைச்சு மற்றும் தொழிநுட்ப அமைச்சராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனையை கருத்தில் கொண்டு மேற்குறிப்பிட்ட இரண்டு சட்டமூலங்களைத் தயாரிப்பதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 03.ஓய்வு பெறும் குறைந்தபட்ச வயது சட்டம்

தனியார் துறை ஊழியர்கள் ஓய்வு பெறுவதற்கு தற்போது காணப்படும் குறைந்தபட்ச வயதெல்லையைத் திருத்தம் செய்வதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு 2021 மார்ச் மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, தயாரிக்கப்பட்ட அடிப்படைச் சட்டமூலம், பிரதமர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள ஆடைக் கைத்தொழிற்துறை, வர்த்தகத் துறைகளில் தாக்கம் செலுத்தும் கொள்கை ரீதியானதும் சட்டரீதியானதுமான விடயங்கள் பற்றி ஆராயும் குழுவில் தொடர்புடைய அனைத்துத் தரப்பினர்களின் பங்கேற்புடன் தொடர்ந்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறித்த குழுவில் எட்டப்பட்ட உடன்பாடுகளுக்கமைய முன்மொழியப்படும் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளில் 52 வயதை எட்டாத ஊழியர்களின் ஓய்வு வயதை 60 வரைக்கும் நீடிப்பதற்கும், சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியில் 52 வயது அல்லது அதற்கு அதிகமான ஊழியர்களின் வயதுக்கேற்ப மூன்று பிரிவுகளின் கீழ் உயர்ந்தபட்சம் 59 வயது வரை பணியாற்றுவதற்கு இயலுமான வகையில் ஏற்பாடுகளை உள்வாங்கி சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள தனியார் துறை ஊழியர்கள் ஓய்வு பெறும் குறைந்தபட்ச வயதுச் சட்டத்தைப் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக தொழில் உறவுகள் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 04. குடியியல் வழக்குக் கோவையை திருத்தம் செய்தல்

அழைப்பாணை பிறப்பித்தல் மற்றும் வழங்கல் தொடர்பாக தற்போது காணப்படும் ஏற்பாடுகளைத் திருத்தம் செய்ய வேண்டிய தேவை, நீதி அமைச்சர் அலி சப்ரி நியமித்துள்ள குடியியல் சட்டத் திருத்தங்கள் தொடர்பான குழு பரிந்துரைத்துள்ளதுடன், வழக்கொன்றின் தரப்பினர்களுக்கு அழைப்பாணை அனுப்பும் போது மின்னஞ்சல் மற்றும் கைத்தொலைபேசி செய்தி போன்றவாறான சமகாலத்தில் அதிகமாகப் பயன்படுத்தும் தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்துவதன் தேவை பற்றிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த குழு பரிந்துரைத்துள்ள திருத்தங்களை உள்வாங்கி குடியியல் வழக்குக் கோவை (101 ஆவது அத்தியாயம்) திருத்தம் செய்வதற்காக சட்டமூலத்தை தயாரிப்பதற்காக நீதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### 05.பட்ஜெட் விவாத நிகழ்ச்சி நிரல்

2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட விவாத நிகழ்ச்சி நிரல் கீழ்வரும் வகையில் நடாத்துவதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்த ஒழுங்குபடுத்தல் விடயங்களை அமைச்சரவை கவனத்தில் எடுத்துள்ளது.

2021 நவம்பர் மாதம் 12 ஆம் திகதி வரவு- செலவுத் திட்டம் சமர்ப்பித்த பின்னர், வரவு செலவு விவாதம் ஆரம்பிக்கப்பட்டு 2021 நவம்பர் 22 ஆம் திகதி வரை விவாதத்தை நடாத்துதல்

வரவு-செலவுத் திட்டம் தொடர்பான செயற்குழு விவாதம் 2021 நவம்பர் மாதம் 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2021 டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை நடாத்துதல்

வரவு-செலவுத் திட்டம் மூன்றாவது வாசிப்பின் வாக்கெடுப்பை 2021 டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி பிற்பகல் 5.00 மணிக்கு நடாத்துதல் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவில்

### பாம்பைக் கடிக்க வைத்து, மனைவியைக் கொன்ற வழக்கு:

## கணவனுக்கு இன்று தண்டனை

பாம்பைக் கடிக்க வைத்து, மனைவியை கொன்ற வழக்கில் குற்றவாளியான கணவனுக்கு, தண்டனை இன்று (13) அறிவிக்கப்படுமென்று கொல்லம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் அஞ்சல் பகுதியை சேர்ந்த கணவன் அடூரை சேர்ந்தவர். 7.5.2020 அன்று தாய் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த மனைவி, பாம்பு கடித்து இறந்தார். அறையில் இருந்த பாம்பை உறவினர்கள் அடித்துக் கொன்றனர். இதற்கு முன்னரும் ஒரு முறை கணவர் வீட்டில், மனைவியை பாம்பு கடித்து சிகிச்சையில் உயிர் பிழைத்தார். ஆனால் உறவினர்களுக்கு இந்த மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டது. பொலிஸில் புகார் செய்யப்பட்டது.

பொலிஸார் விசாரணை செய்யும் போது உண்மை வெளிச்சத்துக்கு வந்தது. இதைத் தொடர்ந்து கணவன் மற்றும் பாம்பு வழங்கிய சுரேஷ் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். தனித்துவம் வாய்ந்த இந்த வழக்கில் அறிவியல் பூர்வமாகவும் பொலிஸார் விசாரித்தனர்.

பாம்பு சாதாரணமாக கடித்தால் பற்களுக்கு இடையிலான இடைவெளி 1.7 செ.மீ மட்டுமே இருக்கும். ஆனால்,குறித்த பெண்ணைக் கடித்த பாம்புகளின் பல் இடைவெளி 2.5 மற்றும் 2.7 செ.மீ இருந்தன. பாம்பின் தலையில் பிடித்து, கடிக்க வைத்தால்தான் இந்த இடைவெளி வரும் என்பதை அரசாங்காத் தரப்பில் எடுத்துரைத்தனர். இதற்காக கோழி இறைச்சியில் பாம்பின் தலையை பிடித்து கடிக்க வைத்து அதன் அளவை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

இந்த வழக்கில் சாட்சியமளித்த சுரேஷ், மனநலம் பாதிக்கப்பட்ட மனைவியைக் கொல்ல வேண்டும் என்று கூறி, பெண்ணின் கணவன் பாம்பை வாங்கியதாக வாக்குமூலம் கொடுத்தார். பாம்பு வேகமாக கடிப்பதற்காக அதை ஏழு நாள் பட்டினி போட்ட மருத்துவ பரிசோதனை அறிக்கை ஆஜர்படுத்தப்பட்டது.

புதுடெல்லி

## பாகிஸ்தான் பயங்கரவாதி புதுடெல்லியில் கைது

நாடு முழுவதும் ஆயுதபூஜை, தீபாவளி என அடுத்தடுத்து பண்டிகைகள் கொண்டாடப்படவுள்ள சூழலில், புதுடெல்லியில் பயங்கரவாத தாக்குதல்கள் நடத்தப்படலாம் என புதுடெல்லி பொலிஸார் உளவுத் தகவல்களை அளித்துள்ளனர்.

இதனை தொடர்ந்து புதுடெல்லி பொலிஸ் ஆணையாளர் தலைமையில் உயரதிகாரிகள் ஆலோசனை மேற்கொண்டனர். அதன்பின் செய்தியாளர்களிடம் அவர் கூறும்போது, உள்ளூர் குற்றவாளிகள், கும்பல்கள் மற்றும் சமூக விரோத கும்பல்களின் உதவியின்றி அவர்களால் தாக்குதல் நடத்த முடியாது.

இதேபோன்று இரசாயன பொருள் விற்பனைக் கடை, வாகன நிறுத்தங்கள், பழைய பொருள் விற்பனையாளர்கள், கார் டீலர்கள் தொடர்ந்து சோதனை செய்யப்படுவதுடன், கண்காணிக்கப்படவும் கூடும். பெற்றோல் நிலையங்கள் உள்ளிட்டவை தாக்குதலுக்கான இலக்காக கொள்ளப்படும் என தெரிய வந்துள்ளது. இதனால், வாடகைக்கு இருப்போர், பணியாளர்களை சோதனை செய்யவும் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டு உள்ளது என அவர் கூறியுள்ளார்.



இந்த நிலையில், புதுடெல்லி சிறப்பு பிரிவு பொலிஸார் லெட்சுமி நகர் பகுதியில் ரமேஷ் பூங்கா என்ற இடத்தில் வசித்து வந்த நபர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணை நடத்தினர்.

அதில் அவர் பாகிஸ்தானிய பயங்கரவாதி என்பதும், இந்திய குடிமகன் என போலியான அடையாள அட்டையுடன் வசித்து வந்ததும் தெரிய வந்துள்ளது.

புதுடெல்லி

### முன்னாள் உள்துறை அமைச்சர்

## அனில் தேஷ்முக்கின் வீடுகளில் சோதனை



மஹாராஷ்டிர முன்னாள் உள்துறை அமைச்சர் அனில் தேஷ்முக்கின் வீடுகளில், சி.பி.ஐ அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

மஹாராஷ்டிராவின் மும்பையில், ஹோட்டல்கள் மற்றும் மதுபானக் கடைகளில் இருந்து மாதந்தோறும் 100 கோடி ரூபாய் வசூலித்து தர வேண்டும் என மாநில உள்துறை அமைச்சராக இருந்த அனில் தேஷ்முக் கூறியுள்ளார். முன்னாள் பொலிஸ் ஆணையாளர் பரம்வீர் சிங் குற்றம் சாட்டினார். இந்த ஊழல் புகாரால் தேஷ்முக் அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார். இதுதொடர்பாக விசாரிக்கும்படி சி.பி. ஐக்கு மும்பை உயர் நீதிமன்றம் உத்தர விட்டது.

அதன்படி அனில் தேஷ்முக் மீது சி.பி.ஐ வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது. இதற்கிடையே விசாரணை தொடர்பான இரகசிய ஆவணங்களை சி.பி.ஐ - எஸ்.ஐ அபிஷேக் திவாரியிடம் இருந்து, தேஷ்முக்கின் வழக்கறிஞர் ஆனந்த் தாகா முறைகேடாக பெற்றதாக புகார் எழுந்தது.

இதையடுத்து ஆனந்த் தாகா மற்றும் அபிஷேக் திவாரி மீது சமீபத்தில் வழக்கு பதிவு செய்த சி.பி.ஐ அதிகாரிகள், இருவரையும் கைது செய்தனர். அடுத்ததாக இரகசிய ஆவணங்கள் கசிந்தது தொடர்பாக அனில் தேஷ்முக் தொடர்புடைய இடங்களில் சோதனை நடத்த சி.பி.ஐ முடிவு செய்தது.

புதுடெல்லி

## குழந்தைகளுக்கு கோவாக்சின் தடுப்பூசி

இந்தியா முழுவதும் 2 வயது முதல் 17 வயதுடைய குழந்தைகளுக்கு கோவாக்சின் தடுப்பூசி செலுத்திட மத்திய அரசாங்கம் அனுமதி அளித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.




இந்தியாவில் தற்போது கோவாக்சின், கோவிஷீல்டு, ஸ்புட்னிக்-வி தடுப்பூசிகள் பயன்பாட்டில் உள்ளன. இந்தத் தடுப்பூசிகள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு செலுத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இதுவரை 95 கோடி தடுப்பூசிகள் பொது மக்களுக்கு செலுத்தப்பட்டுள்ளன.

சில நாடுகள் குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்தத் தொடங்கியுள்ள நிலையில், இந்தியாவில் குழந்தைகளுக்கான தடுப்பூசி சோதனை அளவில் இருந்து வந்தன. இதற்காக 2 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு கோவாக்சின் தடுப்பூசி செலுத்தி வல்லுநர்கள் குழுவால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இதனையடுத்து, கோவாக்சின் தடுப்பூசியை குழந்தைகளுக்கு செலுத்த வல்லுநர் குழு அனுமதி அளித்ததை தொடர்ந்து, இந்திய மருந்துகள் கட்டுப்பாட்டு ஆணையமும் 2 வயது முதல் 17 வயதுடைய குழந்தைகளுக்கு கோவாக்சின் தடுப்பூசி செலுத்திட அனுமதி அளித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கூடலூர்



### எட்டு நாள்களுக்குப் பிறகு

## கண்காணிப்பு கெமராவில் பதிவான புலி

நீலகிரி மாவட்டம் கூடலூரில் மக்களை அச்சுறுத்திவந்த ‘டி23’ புலியை 18வது நாளாக வனத்துறையினர் தேடிவருகின்றனர். இதுவரை நான்கு மனிதர்களையும் 30க்கும் மேற்பட்ட கால்நடைகளையும் கொன்றுள்ள இப்புலியைப் பிடிக்க அப்பகுதி பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் தொடர்ந்து முயன்று வருகின்றனர்.

தற்போது, புலியைச் சுட்டுக்கொல்ல உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் வனத்துறை சார்பில் புலியை மயக்க ஊசி செலுத்திப் பிடிக்கவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து மரங்களின் மீது பரண்கள் அமைத்தும், இமேஜ் ட்ராப், ட்ரோன் கேமராக்கள் மூலமும் கண்காணிக்கப்பட்டது. மீண்டும் புலி, தேவன் எஸ்டேட், மேல் பீல்டு பகுதிக்கு வரலாம் என்று கணித்துள்ள வனத்துறை, போஸ்பர பகுதியில் முகாமிட்டிருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

சென்னை

### ஊரக உள்ளாட்சித் தேர்தல்

## மாயமான வாக்குப் பெட்டி சாவி

9 மாவட்ட ஊரக உள்ளாட்சி தேர்தல் வாக்கு எண்ணிக்கை நேற்றுத் தொடங்கியது. 138 மாவட்ட கவுன்சிலர், 1,375 ஒன்றிய கவுன்சிலர், 2,779 கிராம ஊராட்சி தலைவர், 19,686 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவிகளுக்கு வாக்குப்பதிவு கடந்த 6ஆம் மற்றும் 9ஆம் திகதிகளில் நடைபெற்றது. இத்தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணியானது 74 மையங்களில் நேற்றுக் காலை 8 மணிக்கு தொடங்கியது.



இதில் 140 இடங்களுக்கான மாவட்ட கவுன்சிலர்கள் பதவிக்கான வாக்கு எண்ணிக்கையில் திமுக கூட்டணி 2 இடங்களில் முன்னிலையில் இருக்கிறது. மேலும், 1381 இடங்களுக்கான ஒன்றிய கவுன்சிலர்கள் பதவிக்கான வாக்கு எண்ணிக்கையில் திமுக கூட்டணி 5 இடங்களில் முன்னிலையில் இருக்கிறது.

இதேவேளை, திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் தபால் வாக்குப் பெட்டியின் சாவி தொலைந்தது. இதனால் சுத்தியல் மூலம் வாக்குப்பெட்டியின் பூட்டு உடைத்து தபால் வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன.



ஐ.பி.எல்:

# வெளியேற்றப்பட்ட றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர்

இந்தியன் பிறீமியர் லீக்கிலிருந்து றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் வெளியேற்றப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கொல்கத்தா நைட் றைடர்ஸுடனான வெளியேற்றப் போட்டியில் தோற்றே தொடரிலிருந்து பெங்களூர் வெளியேற்றப்பட்டுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பெங்களூர்

பெங்களூர்: 138/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: விராட் கோலி 39 (33) ஓட்டங்கள். பந்துவீச்சு: சுனில் நரைன் 4/21 [4], லொக்கி பெர்கியூசன் 2/30 [2], வருண் சக்கரவர்த்தி 0/20 [4], ஷகிப் அல் ஹஸன் 0/24 [4])

கொல்கத்தா: 139/6 (19.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷுப்மன் கில் 29 (18), சுனில் நரைன் 26 (15), வெங்கடேஷ் ஐயர் 26 (30), நிதிஷ் ரானா 23 (25) ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் சிராஜ் 2/19 [4], ஹர்ஷால் பட்டேல் 2/19 [4], யுஸ்வேந்திர சஹால் 2/16 [4])

போட்டியின் நாயகன்: சுனில் நரைன்

இந்நிலையில், ஷார்ஜாவில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது தகுதிகாண் போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸை கொல்கத்தா எதிர்கொள்ளவுள்ளது.



உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்:

## சமநிலையில் குரோஷியா ஸ்லோவாக்கியா போட்டி

கட்டாரில் நடைபெறவுள்ள சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் உலகக் கிண்ணத் தொடருக்கான ஐரோப்பிய தகுதிகாண் போட்டிகளில், குரோஷியாவில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், ஸ்லோவாக்கியாவுக்கும் இடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

குரோஷியா சார்பாக, அன்ட்ரே கிரமரிச், லூகா மோட்ரிச் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். ஸ்லோவாக்கியா சார்பாக, இவான் ஸ்ஷரன்ஸ், லூகாஸ் ஹரஸ்லின் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

## மீண்டும் செல்சிக்கு திரும்பும் ஹஸார்ட்?




ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்றிட்டின் மத்தியகளவீரரான ஈடின் ஹஸார்ட்டை மீளக் கைச்சாத்திடுவது தொடர்பில் உத்தியோகபற்றற்ற பேச்சுக்களை றியல் மட்றிட்டுடன் அவரது முன்னாள் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும், 30 வயதான ஹஸார்ட்டுக்குப் பதிலாக பின்களவீரரான றீஸ் ஜேம்ஸை செல்சியிலிருந்து றியல் மட்றிட் வேண்டுவதாகக் கூறப்படுகிறது.




## "ஜிம்மாலேயே அதிரடியாகத் துடுப்பெடுத்தாடுகிறேன்"–பிலிப்ஸ்

இவ்வாண்டில் இருபதுக்கு - 20 போட்டிகளில் நியூசிலாந்தின் கிளென் பிலிப்ஸே அதிகமாக 89 ஆறு ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

இந்நிலையில், ஜிம்மில் நீண்ட பயிற்சிகளாலேயே ஆறு ஓட்டங்களைப் பெறக் கூடியதாகவுள்ளது என பிலிப்ஸ் கூறியுள்ளார். இந்த நீண்ட பயிற்சிகளில், நாளொன்றுக்கு 800 பிரஸ்-அப்கள் உள்ளடங்குகின்றன.

இவ்வாண்டில் 857 பந்துகளை எதிர்கொண்டு 89 ஆறு ஓட்டங்களை பிலிப்ஸ் பெற்றுள்ள நிலையில், இரண்டாமிடத்தில் 810 பந்துகளை எதிர்கொண்டு 82 ஆறு ஓட்டங்களை இங்கிலாந்தின் லியாம் லிவிங்ஸ்டோன் காணப்படுகின்றார். மூன்றாமிடத்தில், 587 பந்துகளை எதிர்கொண்டு 75 ஆறு ஓட்டங்களைப் பெற்றவாறு மேற்கிந்தியத் தீவுகளின் எவின் லூயிஸ் காணப்படுகின்றார்.



ஐ.பி.எல்:

# பஞ்சாப்பிலிருந்து விலகும் ராகுல்?

இந்தியன் பிறீமியர் லீக்கின் பஞ்சாப் கிங்ஸின் அணித்தலைவரான லோகேஷ் ராகுல், அடுத்தாண்டு அவ்வணியில் இடம்பெறமாட்டார் என அறியப்படுவதுடன், ஏலத்துக்குச் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, ராகுலை ஒப்பந்தம் செய்ய ஆர்வமுள்ள சில அணிகள் அவரை அணுகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

எவ்வாறு அடுத்தாண்டுக்கு வீரர்களைத் தக்க வைப்பது என்பது குறித்து இன்னும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சீனா

வெள்ளத்தில் தத்தளிக்கும் சீனா

# 15 பேர் உயிரிழப்பு



சீனாவின் ஷான்சி மாநிலத்தில், பெய்துவரும் கடுமையான மழை காரணமாக அப்பகுதி வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றது.

இதன் காரணமாக 15 பேர் உயிரிழந்துள்ளதாகவும் ,பலர் காணமற் போயுள்ளதாகவும் , அவர்களை மீட்கும் பணியில் பேரிடர் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளதாகவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் சுமார் 18 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், 120,000 குடியிருப்பாளர்கள் வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர் எனவும் 200,000 ஹெக்டர் விளைநிலம் பாதிப்படைந்துள்ளதாகவும். 17,000 வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மஞ்சள் நதியின் ஒரு பகுதியில் அணை உடையும் அபாயம் காணப்படுவதாகவும் அதனைப் பாதுகாக்க மீட்புப் பணியாளர்கள் போராடி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவுஸ்திரேலியா



## வாழை மரத்தால் 10 கோடி இழப்பீடு

வாழை மரத்திலிருந்து கீழே விழுந்த ஒருவருக்கு 502,740 டொலர்களை (இலங்கை மதிப்பில் 10 கோடி ரூபாய்) இழப்பீட்டுத் தொகையாக நிறுவனமொன்று வழங்கியுள்ள சம்பவம் அவுஸ்திரேலியாவில் இடம்பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான வாழைத் தோட்டத்தில் தொழிலாளி ஒருவர் பணி செய்து கொண்டிருக்கும் போது திடீரென வாழை மரத்தில் இருந்து கீழே விழுந்தார்.

இதனால் அவருக்கு படுகாயம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அத்தொழிலாளி வாழை மரத்தில் இருந்து கீழே விழுந்த நிலையில் அதற்குப் பின்னால் எந்த வேலையும் செய்ய முடியாததால் இழப்பீடு வேண்டும் என்று கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இவ்வழக்கு கடந்த 5 ஆண்டுகளாக நடைபெற்று வந்த நிலையில் தற்போது வாழை மரத்திலிருந்து கீழே விழுந்த தொழிலாளிக்கு 10 கோடி ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இத்தீர்ப்பை அந்நிறுவனம் ஏற்றுக் கொண்டு அத் தொழிலாளிக்கு இழப்பீட்டை வழங்கி உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.




## முட்டை இல்லாத முட்டை; அறிமுகப்படுத்தும் நெஸ்லே




தாவரங்களை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்படும் முட்டைகளையும் இறால்களையும் பிரபல உணவுப் பொருள் உற்பத்தி நிறுவனமான நெஸ்லே அறிமுகம் செய்யவுள்ளது.

வேகன் (Vegan) எனப்படும் இறைச்சியோ விலங்குகளிலிருந்து எடுக்கப்பட்ட எந்த பொருளுமோ சேர்க்கப்படாத உணவுவகைகளுக்கான தேவை அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் குறித்த நிறுவனம் தயாரித்துள்ள தாவரப் பொருள்களை உள்ளடக்கிய முட்டையில், சோயா புரதங்களும், omega-3 ஊட்டச்சத்தும் அடங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன் முட்டை, Garden Gourmet vEGGie எனும் பெயரிலும் இறால், Vrimp எனும் பெயரிலும் ஐரோப்பாவில் முதலில் விற்பனைக்கு வரும் எனவும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரேஸில்

## காற்பந்துப் போட்டியை பார்வையிட

### பிரேஸில் ஜனாதிபதிக்கு அனுமதி மறுப்பு



பிரேஸிலின் சா பாலோ நகருக்கு, குடும்பத்தோடு விடுமுறையைக் களிக்கச் சென்ற அந்நாட்டு ஜனாதிபதி ஜெயீர் பொல்சொனாரோ அங்கு நடைபெற்ற உள்நாட்டு அணிகளுக்கு இடையிலான காற்பந்துப் போட்டியைக் காணச் சென்றுள்ளார்.

எனினும் மைதானத்தில் இருந்த அதிகாரிகள் ஜனாதிபதி பொல்சொனாரோ கொரோனாத் தடுப்பூசியைச் செலுத்திக் கொள்ளவில்லை என்பதால் மைதானத்துக்குள் அனுமதிக்க மறுத்துவிட்டனர்

இதனால் கோபமுற்ற அவர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து அவர் பத்திரிகையாளர்களிடம் பேசுகையில், "எதற்கு தடுப்பூசி சான்றிதழ். நான் காற்பந்து விளையாட்டை பார்க்க விரும்பினேன், அதற்கு தடுப்பூசி போட வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். அது ஏன்? தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களை விட எனக்கு நோய் எதிர்ப்பு சக்தி அதிகமாக உள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

போலந்து



ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து

## விலகுகிறது போலந்து

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து போலாந்து விலகுவதாக அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் அவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து போலந்து வெளியேறினால் பல்வேறு பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்படும் எனத் தெரிவித்து அரசுக்கெதிராக லட்சக்கணக்கான மக்கள் நாட்டின் பல பகுதிகளிலும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரித்தானியா

## 2,000 அதிகாரிகள் மீது பாலியல் குற்றச்சாட்டு




பிரித்தானியாவில் கடந்த 4 வருடங்களில் பாலியல் வன்கொடுமை தொடர்புடைய குற்றச்செயல்களில் 2,000 பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சமூக நல உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர் என வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதையடுத்து, அந்நாட்டில் பொலிஸார் தொடர்பான குற்றச்சாட்டுகள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 13 ஒக்டோபர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.